வாரப் பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12.

USHA உஷா
மின்சார விசிறிகள்

| | | |
|---|---|---|
| சிலிங் | 56" | ரூ 240 |
| ,, | 48" | ரூ 235 |
| ,, | 36" | ரூ 205 |
| பெடஸ்டல் | 16" | ரூ 215 |
| மேசை (Table) | 16" | ரூ 160 |

சோல் ஏஜண்டு:- G H REIMOO

தகம் 6 | நந்தன ஆடி மீ 12உ | [27-7-52] | ஞாயிற்றுக்கிழமை | ஜுல்காபிதபிறை | இதழ் 9

# வேலையில்லாதோர் சத்தியாகிரகமும் ஆரம்பமாகலாம்

## கொழும்பு மகாநாட்டில் முடிவு செய்யப்படும்

## "வேலை அல்லது நிவாரணநிதி" என்ற போர்க்கோஷம்

(நமது நிருபர்)

நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கான வேலையில்லாதவர்கள் சமீபத்தில் ஒன்று கூடி, ஸ்தாபன ரீதியாகத் திரண்டு வேலை கோரிப் போராடுவார்களென்று தெரிகிறது.

பிரஜாவுரிமைக்காக இலங்கை-இந்தியர் காங்கிரஸ் நடத்தும் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் படிப்பினைகளையொட்டி அவர்களும் தங்களின் கடைசி முயற்சியாக சத்தியாக்கிரகம் செய்வதென்று முடிவு செய்யக்கூடும்.

போராட்டத் திட்டங்களை வகுத்துக்கொள்வதற்காக வேலையில்லாத் திண்டாடுபவர்களின் மகாநாடொன்று அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறும். பிரபல தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் இம் மகாநாட்டில் கலந்துகொள்வார்களென்று தெரிகிறது.

எங்கு வேண்டுமன்றாலும் வேலை கொடுங்கள் என்று பிரஸ்தாப மகாநாடு அரசாங்கத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கும். "வேலை கொடுங்கள். இல்லையேல் வேலையில்லாதவர்களுக்கு நிவாரணப் பணம் கொடுங்கள்" என்பதுதான் அவர்களின் முக்கிய போராட்ட கோஷமாயிருக்கும்.

அரசாங்கம் நிவாரணமளிக்கத் தவறிவிடுமாயின், அவர்கள் சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பார்கள். மக்களைப் பீடித்துள்ள முக்கியமான ஒரு கஷ்டத்திற்கு முடிவு கட்ட சத்தியாக்கிரகம் தானே ஒரே வழி.

## பாராளுமன்றத்தில் இலங்கை இந்தியர் போராட்டம்

### பொறுப்பை தமிழ் அரசுக் கட்சி ஏற்றுக்கொண்டது

யு. என். பி. அரசாங்கத்தின் கெடுபிடிச் சட்டத்தின் காரணமாக இலங்கையிலுள்ள இந்திய மக்கள் தங்கள் நலவுரிமைகள் பற்றி ஜன பிரதிநிதிகள் சபையில் எடுத்துக் கூறுவதற்கு ஒரு பிரதிநிதியைத் தானும் அனுப்ப இயலாதவர்களாக ஆகிவிட்டார்கள். இந்நிலை குறித்து ஆளும் கட்சியும் அவர்களுக்கு பாதபூஜை புரியும் ஆசாமிகளும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஒருவாறு இந்தியத் தமிழர்களை ஒடுக்கியாயிற்று என்றுகூடப் பேச்சுக்கள் அடிபட்டன.

இந்தியத் தொழிலாளர்களின் இன்னலை ஜனப்பிரதிநிதிகள் சபையில் இடித்துக் கூற எவர் இருக்கிறார்? நியமன அங்கத்தவரான திரு வைத்திலிங்கம் வெறும் கைகாட்டி மரமாச்சே என்று இலங்கை இந்தியர்கள் எண்ணியிருக்கலாம்.

ஆனால் நடந்ததென்ன? பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட விவாதப் பேச்சை ஆரம்பித்த கோப்பாய் பிரதிநிதி திரு ஸி வன்னியசிங்கமும் (தமிழரசுக் கட்சி) திரு ஸி சுந்தரலிங்கமும் (சுயேச்சை) இந்திய மக்களின் இன்னலைப்பற்றிப் பேசியிருப்பது இலங்கையில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது.

இந்தியத் தமிழர் மீது அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளை அவர் மிக வன்மையாக கண்டித்துப் பேசியதிலிருந்து இலங்கை தமிழரசுக் கட்சி இந்திய சகோதரர்கள் மீது எவ்வளவு அனுதாபம் கொண்டுள்ளதென்பது பட்டவர்த்தனமாகப் புலனாகிறது.

பாராளுமன்றத்தில் இலங்கை இந்திய சகோதரர்களின் போராட்டத்தை நடத்தும் பெரும் பொறுப்பை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொண்டிருப்பதற்கு அறிகுறிதான் திரு வன்னியசிங்கத்தின் காரசாரமான பேச்சாகும்.

பாராளுமன்றத்தில் கோப்பாய் பிரதிநிதி திரு வன்னியசிங்கம் தமது வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்தில் உணவுப் பிரச்னை, கல்ஓயாவில் சிங்களவர்களை குடியேற்றுதல், இலங்கை - இந்தியா பிரச்னை, ஸ்தலஸ்தாபனத் தேர்தலை ஒத்திவைப்பு, அரசாங்கப் பாஷை, சமஷ்டி முதலிய விஷயங்களைப் பற்றி சாங்கோபாங்கமாகவும் தெளிவாகவும் விளக்கிப் பேசினர். அவரது பிரசங்கத்தில் அடிக்கடி குறுக்கிட்டு கண்டனஞ்செய்த மந்திரிகளுக்கு சுடச்சுட சாட்டை அடி கொடுத்தார்.

உணவுப் பஞ்சம் ஏற்படப்போகிறதென்பதை உணவு மந்திரியின் பிரசங்கத்திலிருந்தே கொண்டே நிரூபித்துக்காட்டினர். ஏழை இந்திய தோட்டத் தொழிலாளரின் இன்னல்களை எடுத்துக்கூறி, பிரஜாவுரிமை மனுக்களைப் பரிசீலித்து பைசல் செய்ய 50 வருடங்களாகுமென்றும், அதுவரை மனுதாரர்கள் உயிர் வாழமுடியாதென்றும் கூறினர். "டைம்ஸ்" பத்திரிகைகளில் வெளியான 3 மத குருமார்களின் கட்டுரையும் சுட்டிக் காட்டினர்.

சிங்களமும் தமிழும் அரசாங்கப் பாஷையாகப்படுமென்ற கூற்றை விளக்கி, ஒரு அரசாங்கத்தின் நடவடிக்கைகளை இரு மொழிகளில் நடத்தமுடியாதென்பதையும் இரு மொழிகளிலும் அரசாங்க அலுவல்களைச் செய்வது சாத்தியமல்ல என்பதையும் தெளிவாக்கிய திரு வன்னியசிங்கம் இதற்குள்ள ஒரே வழி சமஷ்டி முறைதான் என்பதை விளக்கிக் கூறினர். அவரது பிரசங்கம் முழுவதும் அடுத்த வாரம் சுதந்திரனில் வெளியாகும்.

## யு. என். பி. மந்திரிகளின் இரகசிய யாத்திரை

### கதிர்காமத்தில் தீவிபத்து

இம்மாதம் 15ந் தேதி கதிர்காமம் கந்தப் பெருமான் கோவிலில் திடீரென ஒரு தீவிபத்து ஏற்பட்டதாம். இது ஏதோ தவறுதலாக ஏற்பட்ட சம்பவமென்று கருதுவதற்கிடமில்லை.

பல செப்படி வித்தைகளைச் செய்து அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்ட யு. என். பி. கட்சித் தலைவர்களான திரு டட்லி சேனநாயகாவும், திரு ஜே. ஆர். ஜயவர்தனவும் இம்மாதம் 14ந் தேதி இரகசியமாக கதிர்காமத்திற்குச் சென்று, அர்ச்சனைகள் செய்து, பிரதமர் ஒரு தங்க நாற்காலியும், நிதி மந்திரி ரூ 50ம் காணிக்கை சமர்ப்பித்தார்களென்றும் அங்கு வந்திருந்த தினசரிப் பத்திரிகை நிருபர்களிடம் இச்செய்தியை வெளியிட வேண்டாமென்று பிரதமர் கூறினரென்றும் தகவல் கிடைத்திருக்கிறது.

டட்லியும் ஜயவர்தனவும் கோவிலைவிட்டுச் சென்றதும் திடீரென அங்கு தீப்பற்றிக்கொண்டதாம்.

அதிசக்திவாய்ந்த 7 வால்வ்

ரேடியோ

வீட்டுக் கரண்டில் பாவிக்கக்கூடியது

ரூபா 90/- மாத்திரம்

★ ஆக ரூபா 90-00ஐ மொத்தமாக முற்பணமாகச் செலுத்தி, மிகச் சக்திவாய்ந்த 7 வால்வ் ரேடியோவைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

★ மிகுதிப் பணத்தை ஆறுதலாக 11 மாதங்களில் ரூ 45/84 வீதம் செலுத்தலாம்.

★ இன்னும் மலிவான பலரக ரேடியோக்கள் உண்டு. விவரத்திற்கு எழுதவும்.

சீடில்ஸ்

சீடில்ஸ் சிறி ரேடியோ

பூந்தோட்ட வீதி, கொழும்பு

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

வரிஒன்றுக்கு 50 சதம் 6 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூபாய் 3-00

### தேவை

கொழும்பில் வசிக்கும் ஒரு கண்ணியமான, குழந்தைகள் இல்லாத தமிழ் குடும்பத்திற்கு சமையல் வேலை செய்ய நடுத்தர வயதுடைய வேலைக்காரி தேவை. L A. I. C/o சுதந்திரன்.

வின்ஸ்லோ பாதிரியாரின் தமிழ் ஆங்கில அகராதி தேவை.
எஸ். ஆர். 196, தட்டாதெரு கொழும்பு.

டபிள்டிமை சைஸ் பத்திரிகை அடிக்கக்கூடிய செனிஸ் உடனடியாக தேவை விண்ணப்பிக்க.
மானேஜர், சுதந்திரன் 194, ஏ தட்டாதெரு. கொழும்பு-12

வேலை செய்யக்கூடிய அச்சாபீஸ் தேவை விலை குறித்து விண்ணப்பிக்கவும்.
L. A 202 C/o சுதந்திரன்

நல்ல நிலைமையிலுள்ள சோடா இயந்திரம் தேவை மிகக குறைந்த விலை குறித்து எழுதுக
L A 203 C/o சுதந்திரன்

### வியாபாரம்

மிஸ் கனகம்-புதுமையான நாவல் 35 பக்கங்கள். தெள்ளிய தமிழ்நடை. விற்பனவு ஏஜண்டுகள் தேவை நல்ல கமிஷன தரப்படும்.
156, தட்டாதெரு, கொழும்பு


### செவ்வாய் கிரகத்துக்கு 'தோஷம்'

நியூயார்க்—

சமீபத்தில் செவ்வாய் கிரகத்திலிருந்து பெரிய ஜோதி வெளிப்பட்டு சில நிமிஷங்கள் தெரிந்ததாகவும் அதைத் தொடர்ந்து ஒளியுடன் புகை மண்டலம் தோன்றியதாகவும் ஒரு ஜப்பானிய விஞ்ஞானி கூறுகிறார். செவ்வாய் கிரகத்தில் ஏதாவது எரிமலை குமுறியதன் விளைவாக இந்தக் காட்சி தோன்றியிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது

---

### ஏழை பெண்களுக்கு சட்ட உதவி

பம்பாய்—

ஏழைப் பெண்களுக்கு இலவசமாகச் சட்டம் சம்பந்தமான யோசனைகள் கூறி உதவி செய்ய பம்பாய் மாகாண மாதர் கவுன்ஸில் தீர்மானித்திருக்கிறது.

---

### ரஷ்ய துண்டுப் பிரசுரங்களுக்கு தடை

வாஷிங்டன்—

அமெரிக்காவில் துண்டுப் பிரசுரங்களை பிரசுரிக்கவோ வினியோகிக்கவோ கூடாது என்று ரஷ்ய ஸ்தானிகராலயத்திற்கு யு.எஸ் ராஜாங்க இலாகா உத்தரவிட்டுள்ளது.

## கேட்டுப்பாருங்கள்

குயுக்தி

'அரசியல் ரசிகன்''
மட்டக்களப்பு

கே: போலிச் சுதந்திரத்தின் பாதுகாவலர்களுள் புகைச்சல் கிளம்பியிருப்பதாகவும்—அவர்களது ஐம்பநாடகம் இவ்வருட இறுதிக்குள் மறைந்துவிடும் என்றும் பலர் கதைக்கிறார்கள் உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: திருடுவதில் ஒற்றுமையும் பங்கு வைப்பதில் பிளவும் திருடர் கூட்டத்தில் ஏற்படுவது சகஜமே யல்லவா?

***

எம். கே. சாமி,
கல்கிசை.

கே: ஐயா குயுக்தியாரே நீர் ஒரு புத்திசாலி என்று என் நண்பர் கூறுகிறார். இது உண்மையா?

ப: உண்மை. எங்கோ இருக்கும் உம் நண்பருக்குத தெரிந்திருக்கும் இந்த உண்மையை என்கூடப் பழகும் என் மனைவியால் கண்டுபிடிக்க முடியவில்லையே என்றுதான் கவலைப்படுகிறேன்.

***

கே நவரட்ணராஜா,
யாழ்ப்பாணம்.

கே: உலகத்தில் சிறந்த மதம் எது?

ப: சர்வ சம மதம்

கே: கடலிலும் பெரியது எது?

ப: மாதர் தம் கண்கள். ஏனெனில் வேண்டும்போது கடலைவிட அதிக நீரைக் கொட்டி ஏழைக் கணவனை மூச்சுத் திணறச் செய்துவிடுகின்றன

***

எஸ். விஸ்வலிங்கம்,
எகலியகொட.

கே: உலகம் போற்றும் அறிஞர் பெர்னுட்ஷா கடவுள் இருக்கிறார் என்று சொல்பவரும் முட்டாள் இல்லையென்று சொல்பவரும் முட்டாள் என்று சொல்லுகிறாரே அதன் கருத்து என்ன?

ப: கடவுள் உண்டா இல்லையா என்ற ஆராய்ச்சியே அவசியம் இல்லை என்பது அவர் கருத்தாயிருக்கலாம். நல்லவேளை, ''கடவுள் என்பவர் ஒருவர் இருக்கிறார். அவர் முட்டாள்'' என்று சொல்லாமல் விட்டாரே, அந்த அளவில் பாவம், கடவுள் தப்பிப் பிழைத்தார்.

***

பி. எஸ். ஜோசப்,
செங்கலடி

கே: மதம் என்றால் என்ன?

ப: மதம் என்பது சமயா சமயங்களில் மனிதனுக்குப் பிடிக்கும் திமிர்.

***

கே. எம். அப்துல்சலாம்,
டங்கொட்டுவ.

கே: இந்த உலகில் எந்த சமயத்தினர் ஜனத் தொகையில் கூடினவர்கள்?

ப: சீனு சிகப்பு மயமாகு முன்பு தயாரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி பௌத்த மதத்தினரே அதிகமானோர்.

***

பித்தன், பருத்தித்துறை.

கே: மணமில்லா மலரையும், அழகில்லா மங்கையையும், பேச்சு வன்மையில்லா பிரதிநிதியையும் ஏன் விரும்புகிறார்கள்?

ப: மணமில்லா மலரைப் பிரேத அலங்காரத்திற்கும், அழகில்லா மங்கையை கார்ணிவல் அழகுப் போட்டிக்கும், பேச்சு வன்மையில்லாப் பிரதிநிதியைக் கை காட்டி மரம் இல்லாக் குறையை நீக்கவும் விரும்புகிறார்கள்.

***

பீ. ஏ. நாயகம்,
கொலனுவை.

கே: புருஷனை வசீகரிக்கப் பெண்கள் உடையணிகிறார்களா? அன்றி அயலவரை வசீகரிக்க உடையணிகிறார்களா?

ப: இரண்டுக்குமாக வல்ல; தங்கள் அவலட்சணத்தை மூடி மறைக்கவே பெண்கள் அலங்கார உடை அணிகிறார்கள்.

கே: தற்கால வாலிபப் பெண்கள் நாகரீகமென நினைத்து நிர்வாணத்தை நோக்கி முன்னேறுகிறார்களென்பது எனது அபிப்பிராயம். தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: முன்னேறிவிட்டார்கள் என்பது.

> **பரிசு ரூ. 3-00**
>
> யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும் தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக்கூடிய சிறந்தகேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

★ ப: சிங்கராசா
மட்டுநகர்

கே: மட்டுநகர் மந்திரியார் மாபெரிய பதவியினை—விட்டுவிட்ட விந்தை விளங்குமோ?

ப: கஷ்டம்,
இட்டமுடன் அவர் தலையில் இனைபடி என்றெழுதும் டட்லியைக் கேட்டெழுதிப் பார்.

***

ஐ. எம். ஏ. ஜபார்,
கல்பிட்டி.

கே: ஒரு பாடசாலையில் ஆங்கிலம கற்பிக்கும் ஆசிரியராக விருந்துகொண்டு பருவ மாணவிக்கு கள்ளக் கடிதம் எழுதும் கயவனை என்னவென்று அழைப்பது?

ப: ''லவ் மாஸ்டர்'' என்றழைக்கலாம்.

***

எஸ். சூரியபாலன்,
கல்பிட்டி.

கே: சுந்தரி என்னும் ஒரு பெண் என்னை தன் மான் விழிப் பார்வையாலும தேன மொழிப் பேச்சாலும் என் உள்ளத்தை கொள்ளை கொண்டுவிட்டாள், இதற்கென்ன செய்வது?

ப: அவள் உண்மையில் சுந்தரியானால் அவளை அந்தரிக்க விடாதீர்.

***

எஸ். தில்லைநாதன்,
மட்டக்களப்பு

கே: கல்வி, கலவி இரண்டினதும் வேறுபாடு யாது?

ப: கலவியில் குற்றுப் போடத் தெரிந்தால் அதுவும் ஒரு கல்வியாகிவிடுகிறது.

***

ப. க. கனகசபை,
கொடிகாமம்.

கே: ''வழுக்கி விழுந்தவள்'' என்று யாரைக் கூறுவது?

ப: உயர்ந்த குதிச் சப்பாத்தை வாழைப் பழத் தோலில் வைத்தவளை.

***

டி. பொன்னம்பலம்,
அனுராதபுரம்.

கே: குயுக்தியாரே, உமக்கு கேட்கச் சகிக்காதது எவை?

ப: ஒன்று: என்னைப் பற்றிய வீண் புகழ்ச்சி இரண்டு; பிறரைப்பற்றிய அவதூறு. மூன்று: ரேடியோ ஸிலோன் தமிழ் நிகழ்ச்சி.

***

வி எம். செல்வராசா,
கல்முனை.

கே: கற்பு என்பதற்கு தாங்கள் கொள்ளும் பொருள் யாது?

ப: கற்பு என்பது அந்தக் காலக் குலப் பெண்களுக்கு உயிர். இந்தக் கால நவநாகரீக நங்கைகளுக்கு நோண்ஸென்ஸ்

***

கே. நடராஜா,
பெரிய நிலாவணை.

கே: பழமைக்கும் புதுமைக்கும் ஏற்ற உதாரணம் கூறுங்கள்.

ப: பழமைக்கு உதாரணம் பஞ்சாங்கம். புதுமைக்கு உதாரணம் சுதந்திரன்.

***

''தோழன் சுந்தர்'',
வெள்ளவததை.

கே: டட்லி மந்திரி சபையில் வால்பிடி மந்திரி யார்?

ப: நிச்சயமாக அது த வால் தகவல் மந்திரியாக இருக்கமுடியாது.

***

டி. அமிர்தநாதன்,
காங்கேசன்துறை.

கே: நீர் அறிந்தமட்டில் யாரும் கடவுளை உணர்ந்ததுணடோ?

ப: உண்டு, ஏழைகள் தங்கள் ஒட்டிய வயிற்றின் மூலம் சதா அவரை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

***

சி. இராசையா,
அச்சுவேலி.

கே: உம்மைக் கடவுளாக ஆக்கினால் முதலாவது எதைப் பற்றி ஆலோசிப்பீர்?

ப: எனக்காகக் கட்டப்பட்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான கோயில்களிலும், சர்ச்சுகளிலும், மசூதிகளிலும் ஒன்றை மட்டும் நான் படுத்துறங்க வைத்துக்கொண்டு மற்றவற்றையெல்லாம் தெருவோரத்தில் படுத்துறங்கும் என் ஏழைப் பிள்ளைகளுக்கு பகிர்ந்து எழுதி வைக்க என்ன முத்திரைச் செலவு ஆகும் என்று ஒரு நொத்தாரிசியிடம் கலந்தாலோசிப்பேன்.

***

கே. கனகசூரியம், ஏருவூர்.

கே: காளிக்குப் பலி கொடுப்பது எதற்காக?

ப: காளி கோவில் பூசாரிக்கு வருமானம் வருவதற்காக.

***

இ கந்தையா, அளவெட்டி.

கே: உமக்குப் பிடித்தமான அழகி யார்?

ப: என்றும் இளமை குன்றாத தமிழணங்கு

கே: உம்மை ஒரு பெண் எப்போ வருவார் என்று எதிர்பார்க்கிறார் அவர் யார்?

ப: எப்போது நான் ஆபீஸில் இருந்து வருவேன் என என் மனைவியைத் தவிர வேறு ஒரு பெண்ணும் என்னை எதிர்பார்ப்பதற்கில்லை

***

க. தம்பையா,
எகலியகொட.

கே: நாட்டிலே நடமாடும் விஷப் பூச்சிகளை ஒழிப்பது எப்படி?

ப: டி. டி. ரி. அடித்துப் பாரும்.

***

''பவளமலர்''
தாமரைக்கேணி

கே: பெண்கள் ஏன் அடிக்கடி தங்கள் ஆடைகளை மாற்றுகிறார்கள்?

ப: ஜவுளி வியாபாரியின் பிள்ளைகுட்டிகளுக்கு கஞ்சி வார்க்க

கே; பிறர் குடும்பத்தை சீர்குலைய வைக்கிறார்கள் சில பெண்கள், எதனால்?

ப: தங்களுக்கு சீரான குடும்பம் இல்லாததனால்

ஃ

ந. யோகச் சந்திரன்
பருத்தித்துறை

கே: உலகில் பிழைக்கும் வழியாது?

ப: பிழைப்பதற்கு இலகுவானவழி காக்காய்ப் பிடிப்பதுதான.

ஃ

தெ. கு. அழகரத்தினம்
பருத்தித்துறை

கே: கடலிலும், பூமியிலும், மலையிலும் பார்க்க பெரியது எது?

ப: யு என். பியின் தேர்தல் மோசடி.

ஃ

எம். ஆர். எம் யாசீன்
தெனிபிட்டிய

கே: ஒவ்வொரு கேள்விக்கும் தகுந்தாற்போல் அழகான பதில்களை நீர் எந்தத் தேசத்திலிருந்து இறக்குமதி செய்கிறீர்?

ப; மனப் பிரதேசத்திலிருந்து

கே: சிலர் தாடி வளர்ப்பதேன்?

ப: சயன அறையில் தம் மனைவியின் உபத்திரவத்தைக் குறைப்பதற்காக.

ஃ

ப. புண்ணியமூர்த்தி
பதுளை

கே: நீர் எந்த வகையிலாவது காந்தியைப் பின்பற்றுகிறீரா?

ப: ஒருவகையில் மட்டும், அதாவது பிரயாணத்தில். காந்தியும் மூன்றும் கிளாஸில பிரயாணம் செய்வார். நானும் மூன்றும் கிளாஸில் பிரயாணம் செய்வேன்.

ஃ

போ. ராசதுரை, கண்டி

கே: திரு நடேசனின் தபால் தந்தி மந்திரி பதவியை எதற்கு ஒப்பிடலாம்?

ப: காற்றடிசயாமல் கனிந்து வீழ்ந்த ஒட்டுமாங்கனிக்கு ஒப்பிடலாம்.

---

★ இவ்வாரம் ரூ 3/ பரிசு பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கம்பர் காட்டும் கலைவளர்ச்சி நம் நாட்டில் ஏற்பட வேண்டும்

## இளம் கலைஞர்களை ஆதரிப்பதே அதற்கு ஏற்ற வழி

## முத்தமிழ் விழாவில் பண்டிதர் இரத்தினம்

"மழலைச் சொல் நிரம்பாத நம்முடைய குழந்தைகளுக்குத் தொடக்கத்திலே பொருள் சிறிதும் விளங்காத பிறமொழிப் பாடல்களை கற்பித்தலும், தமிழர்கள் கொண்டாடும் விழாக்களிலே பிறமொழிப் பாடல்களுக்கு முதன்மை கொடுத்துக் குருட்டாட்டம் ஆடுதலும் அருவருப்பான செயல்கள். தமிழருடைய மானத்தைக் கெடுக்கும் முயற்சிகள்; அறியாமையின் அடையாளங்கள்; நம் பழங்காலப் பெருமையையும் வருங்காலச் சிறப்பையும் அழிக்கும் அணுக்குண்டுகள் என்ற உண்மையை உணர்ந்து தமிழ் மக்கள் விழிப்படைந்துவிட்டார்கள்"

மேற்கண்டவாறு இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்றங் கொண்டாடிய முத்தமிழ் விழாவில் மன்றத் தலைவர் பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் பி. ஏ. பி. ஓ. எல். கூறினர்.

அவர் தொடர்ந்து நடத்திய சொற்பொழிவின் தழுவல் பின்வருமாறு:—

ஓரினமக்களின் பண்பாடும் நாகரீகமும் உயர்வும் அவர்களுடைய மொழியின் பெருமையிலும், கலைகளின் சிறப்பிலுமே தங்கியுள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள். நமது முன்னோர்கள் இந்த உண்மையினை நன்கறிந்திருந்தனர். தமிழ் மொழியினைத் தமது உயிரினும் மேலாக மதித்து வளர்த்தனர். "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் எனினும் வேண்டேன்" என்று பெருமிதங் கொழிக்கப் பாடினர் ஒரு புலவர். பண்பாடு சிறந்து ஓங்காவிடில் மக்கள் மரங்களாகவே வாழ்வார்கள் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். விவேகம் எவ்வளவு சிறந்து விளங்கினும் பண்பாடு இன்றேல் அது பயனளிக்காது; பண்பாடில்லாத விவேகிகள் மரங்களைப் போன்றவர்கள் என்று திருவள்ளுவர் கூறியுளார். "அரம்போலுங் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்" என்பது அவர் திருவாக்கு.

அறிவுக் கலையிலும்பார்க்க இன்பக் கலையே பண்பாட்டினை வளர்க்கும் என்றும் நமது அறிஞர்கள் கண்டார்கள். இதனாலேயே பண்பாட்டினை வளர்க்கும் இலக்கியம், இசை, நாடகம் எனும் கலைகளைத் தமிழ் மொழியின் பகுதிகளாக அவர்கள் அமைத்துத் தமிழை முத்தமிழாக்கினார்கள். இன்பக் கலைகளுள்ளே மொழியோடு தொடர்புற்றவை இம்மூன்றுமே என்பதையும் நாம் மறக்கக்கூடாது. இந்தக் கலைகளைப் புலவர்கள் போற்றவளர்த்தார்கள், இவற்றால் வரும் பயனைத் தமிழ் மக்கள் யாவரும் அனுபவிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தனார்கள். மக்களிடைய மாத்திரமன்றி இயற்கைப் பொருள்களாகிய மலை, சோலை முதலியவற்றிலுங்கூட இசையரங்குகளையும் நாடக மேடைகளையும் சுட்டிக் காட்டி இக்கலைகளின் பெருமையினைத் தமிழ் மக்கள் யாவரும் நன்கு உணருமாறு செய்துளர். சங்க நூல்கள் பலவற்றிலே இந்தக் கலைகளைப்பற்றிய பல உண்மைகளை நாம் அறியலாம். இளங்கோவடிகள் செய்த சிலப்பதிகாரத்திலே முத்தமிழ் முழங்குகிறது. அவருக்குப் பின்னர் தோன்றிய புலவர்களும் இக்கலைகளுக்கு முதன்மையளித்துளர். இவர்களுள்ளே கம்பர் தீட்டிக் காட்டும் காட்சிகள் சிலவற்றைக்கண்டு மேற் செல்வோம்.

### கம்பர்தரும் காட்சிகள்

கம்பர் தமது பெருங் காவியமாகிய இராமாயணத்தின் முதற் பகுதியிலுள்ள நாட்டுப் படலம் நகரப் படலம் முதலியவற்றிலே இயல் இசை நாடகங்களின் பெருமையையும் பயனையும் பரப்ப எடுத்துப் பாடியதோடமையாது மிதிலைக் காட்சிப் படலத்திலும் இவற்றினைப் பற்றிக் கூறுகிறார். வசுவாமித்திரரோடு இராமரும் இலக்குவனும் மிதிலை நகரத்துக்கு ஆண்டு விதிவழியே செல்லுகின்றார். அங்கே அவர்கள் பக்கவாத்தியங்களுடன் பெண்கள் பாடி அழகாக நடிக்கும் நடனசாலையைக் கண்டார்கள்

"நெய்திரள் நரம்பிற்றந்த
மழலையின் நிறைந்த
பாடல்
தைவரு மகர வீணை
தண்ணுமை தழுவித்
தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக்
கண்வழி மனமுஞ்
செல்ல
ஐய நுண்ணிடை
யாராடும் ஆடக
அரங்கு கண்டார்"

இப்பாடலில் பாட்டுக்கும் பக்க வாத்தியங்களுக்குமுள்ள தொடர்பையும் நடனம் ஆடும் முறையையும் எவ்வளவு சிறப்பாகவும் நுட்பமாகவும் கம்பர் காட்டியிருக்கிறார்.

மாதர்கள் வீணைவாசித்து விருந்தை அளிக்கும் பெருஞ் செயலை பின்வரும் செய்யுளிலே குறிப்பிடுகிறார் கம்பர்.

"வள்ளுகிர்த் தளிர்க்கை
கோவ மாடகம் பற்றி
வார்ந்த
கள்ளென நரம்பு விக்கிக்
கண்ணொடு மனமுங்
கூட்டி
வெள்ளிய முறுவல்
தோன்ற விருந்தென
மகளிர் ஈந்த
தெள்விளிப் பாணித்
தீந்தேன் செவிமடுத்து
இனிது சென்றார்"

இத்தகைய காட்சிகளை எல்லாம் கம்பர் தம்முடைய நாட்டிலேயே காட்டுகின்றார்; தமிழ் மக்களுக்கே காட்டுகின்றார் என்பதை நாம் உணரவேண்டும். இத்தகைய காட்சி—கலைவளர்ச்சி—நம் நாட்டிலே ஏற்படவேண்டும். இது ஏற்பட்டால்தான் நம் பண்பாடு ஓங்கும்; நம்மினம் சிறக்கும்; நாம் எல்லோரும் இன்பமாக என்றும் வாழலாம்.

கலைகள் வளர்ந்தோங்குவதற்கு அவற்றிலே ஆர்வம் ஏற்படவேண்டும்; அவற்றை வளர்க்கவேண்டுமென்னும் கருத்து உண்டாகவேண்டும் இவற்றை உண்டாக்குவதற்கும் கலை விருந்தை அளிப்பதற்குமாகவே நாம் இம் முத்தமிழ் விழாவினை ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம் எங்கள் முயற்சி வெற்றியும் கண்டுளது.

மழலைச் சொல் நிரம்பாத நம்முடைய குழந்தைகளுக்குத் தொடக்கத்திலே பொருள் சிறிதும் விளங்காத பிறமொழிப் பாடல்களை கற்பித்தலும், தமிழர்கள் கொண்டாடும் விழாக்களிலே பிறமொழி பாடல்களுக்கு முதன்மை கொடுத்துக் குருட்டாட்டம் ஆடுதலும் அருவருப்பான செயல்கள். தமிழருடைய மானத்தைக் கெடுக்கும் முயற்சிகள்; அறியாமையின் அடையாளங்கள்; நம் பழங்காலப் பெருமையையும் வருங்காலச் சிறப்பையும் அழிக்கும் அணுகுண்டுகள் என்று பல அறிஞர்கள் சென்ற முத்தமிழ் விழாக்களிலே எடுத்துரைத்தார்கள், அவர்களுடைய அறிவுரைகள் தமிழ் மக்களை விழிப்படையச் செய்துவிட்டன. தமிழ் மக்கள் கூடும் பேரவைகளிலே தமிழ்ப் பாடல்களுக்கே முதலிடம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தவும் நம் இளைஞர்கள் தொடங்கிவிட்டார்கள். இது வரவேற்கத் தக்கதே.

### கலைஞர்களை ஆதரிக்க வேண்டும்

கலைஞர்களை ஆதரித்துப் போற்றவேண்டியது கலை வளர்ச்சியை விரும்பும் மக்களின் கடமையாகும் இசை நாடகக் கலைஞர்களுக்கு நமது நாட்டிலே போதிய ஆதரவு இருப்பதாகத் தோற்றவில்லை. சிறந்த இசைப் புலவர்களும் நாடகப் புலவர்களும் நம்மிடையே தோன்றுதிருப்பதற்குக் காரணம் இசை நாடகம் பயின்றோரை—இளங் கலைஞர்களை—நாம் ஆதரித்து ஊக்கப்படுத்தாமையேயாகும் நம் நாட்டின் எல்லாப் பகுதியிலும் முத்தமிழ் நிலையங்கள் ஏற்படவேண்டும், கலைவிருந்தினை அளிக்குமாறு கலைஞர்களை நாம் உற்சாகப்படுத்தவேண்டும், அவர்களுக்குப் பொருளுதவியுஞ் செய்ய வேண்டும். எங்கள் மன்றம் மாதந்தோறும் இசை நாடக நிகழ்ச்சிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது என்பதையும் கூற விரும்புகிறேன்.

முத்தமிழையும் வளர்க்கத்தக்க நிலையங்களுள் இப்பொழுது வானொலி நிலையமும் ஒன்றாகவிருக்கிறது. சிறந்ததென்றும் கூறலாம். கலைஞர்களை உற்சாகப்படுத்தி அவர்களுடைய கலைத்திறனை நாட்டு மக்கள் யாவருக்கும் பயன்படுத்தும் வாய்ப்புகள் வானொலி நிலையத்திற்குண்டு. வானொலிப் பகுதிக்கு உயர் திரு சு. நடேசன் அவர்கள் அமைச்சராக இருப்பது தமிழ் மக்களுடைய அதிஷ்டம் என்றே கூறலாம். தமிழ்ப் பற்றும் பண்பாடும் நிறைந்து சிறந்த அறிவும் நல்ல ஆற்றலும் வாய்ந்து விளங்கும் அவரைப் போன்ற தமிழ்ப் பெரியார் ஒருவரை இலங்கையிலே காணமுடியாது. ஆகவே இத்தகைய பெரியாருடைய ஆட்சியிலே வானொலி நிலையம் முத்தமிழையும் செம்மையாக வளர்க்கும் என்று நாம் எதிர் பார்க்கலாம்.

---

## தவிப்பு

தென்றலாடுது சோலையில்—என்
தேகம் வாடுது மாலையில்!

(1)

பூத்த வெண்மதி காயுது—என்
புந்தி உன்னிடம் பாயுது
'தாத்ததிங்கணதோ' மெனக்—கடல்
தங்க யாழிசை பாடுது

(2)

வண்டு பூவினைக் கீறுது—இன
வாதை நெஞ்சிலே மீறுது
தண்டு தண்டென மேக மோடிடத்
தோகை மா மயிலாடுது.

(3)

பூ மணக்குது காற்றிலே—அலை
பொங்கிப் பாயுது ஆற்றிலே
காமனுந்தனை வெற்றி கொண்டிடு
கால மாகுது; காணியோ?

(4)

வேளையாகுது கிள்ளையே—உன்
வீம்பினாற் பெருந் தொலையே
பாலையாகுது என் மனம்—அதிற்
பாலை வார்த்திட வாடியோ.

வி கி இராசதுரை

---


## சூரியனைக் கண்ட பனி

அன்பு சால் ஐயா,

தங்கள் நேத்திரா அமிர்த தைலம் என்ற திவ்விய தைலத்தை உபயோகித்ததின் பயனாக, சுமார் ஐந்து வருடங்களாக என்னைப் பீடித்திருந்த தலைப் பாரம், கண்ணெரிவு, ஜலதோஷம் முதலியன எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல், அற்றுவிட்டன.

இங்ஙனம்,

இடல்கஸ்ஹின்ன, M. K. சூரியன், ஆசிரியர்.

சகலவிதமான உஷ்ண வியாதிகளுக்கும், பித்த கிறுகிறுப்பு, அசதி, சோம்பல், தூக்கமின்மை, கண்ணெரிச்சல, பீனிசம், நீர் வடிதல் அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல் முதலிய வியாதிகளுக்கு, ஓர் அமிர்தம் போன்ற தைலம். கூந்தல் அழகாகவும், கருப்பாகவும் வளரும்.

புட்டி விலை ரூ. 2-50. தபால் செலவு சதம் 75-

எமது சப் ஏஜண்டுகள்

எஸ. கே. முருகேசு, மார்க்கெட் 33, 34, கண்டி.
நெ. செ. மு. முகம்மது அப்துல்லா, நல்பிட்டி:
ஆர். ஏ. குருசாமி செட்டியார் அன் பிரதர்ஸ், 73, பஜார் தெரு, பசறை.
மொடர்ன டிரேப்பரி ஸ்டோர்ஸ், 29, ராஜ வீதி, மாத்தளை
பட்டியகம டிரேடிங் கம்பெனி, தெல்தோட்ட.

சோல் ஏஜண்ட்ஸ்:

செல்லராஜா அன் கோ.
பாக்கியலெக்ஷுமி வைத்தியசாலை
70, செட்டியார் தெரு கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சுந்தரத்தின் லட்சியம்




(தொடர் நவீனம்)

சுந்தரமும் ரஞ்சிதமும் கவலையோடிருந்ததற்கு காரணம் ஆருயிர்க் காதலர்களான அவர்கள் இருவரும் அன்று பிரிய வேண்டியிருந்ததுதான்.

இருவரும் பீ. ஏ. பரீட்சை எழுதி விட்டார்கள். சர்வகலாசாலையும் அன்றோடு விடுதலைக்காக மூடுகிறது. சுந்தரம் தனது தாய் தந்தையர் வசிக்கும் கிறீன் எஸ்டேட்டிற்குப் போய்ச் சேரவேண்டும் ரஞ்சிதமும் லீவுக்கு யாழ்ப்பாணம் போகவேண்டாமா?

இருவரும் விக்டோரியா நந்தவனத்தை அடைந்தனர் வானுறவளர்ந்த வயங்கமரத்தினடியில்கிடந்த ஒரு சீட்டில் இருவரும் உட்கார்ந்தனர்

"ரஞ்சி, நீ சொல்வது போல் நான் தோட்டத்திற்குப்போகாமல் கொழும்பிலேயே தங்கிவிடுவது சாத்தியமில்லை. விடுமுறைக்கு வீட்டுக்குப் போகாவிட்டால் வேறு வினைவேண்டாம். இப்பவே எங்கள் காதல் விவகாரம் அற்ப சொற்பம் அப்பாவின் காதுக்கு எட்டியிருக்கிறது. விடுமுறைக்கு நான் வீட்டுக்குப் போகாமலிருந்து உன்னோடு பீச்சுக்கும் சினிமாவுக்கும் போய்க் கொண்டிருந்தால் இந்தச் சண்டாள உலகம் சும்மா இருக்குமா? ஒன்றைப் பத்தாக அப்பாவின் காதில் போட அவர் விழுந்தடித்துக்கொண்டு இங்கு ஓடிவர என்பாடு திண்டாட்டமாகிவிடும்"

"உங்கள் அப்பாவுக்கு யாழ்ப்பாணத்தவர்கள் மீது ஏன் இவ்வளவு துவேஷம்?"

"துவேஷம் கிவேஷம் ஒன்றுமில்லை. பரம்பரையாக இருந்துவந்த சம்பிரதாயத்தைப் பிடித்துக்கொண்டு தொங்குகிறார். அவ்வளவுதான்"

"இந்தியர்கள் இலங்கையர்களைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதென்று ஒரு சம்பிரதாயமுண்டா?"

"ஆம்! ஒரே நாட்டினருக்குள், ஒரே ஜாதியினருக்குள், ஒரே இனத்தவருக்குள்தான் பெண் எடுக்க வேண்டுமென்பது சிலரின் சம்பிரதாயம்"

"அப்படியானால், எங்கள் காதல் காற்றோடு காற்றாய்ப் போவதுதானா?" என்று ஏக்கமும் வேகமும் கலந்த தொனியில் கேட்டாள் ரஞ்சிதம்.

படித்த பெண்களைக் கூடக் காதல் இப்படிக் குலமயச் செய்து விடும் என்று சுந்தரம் நினைக்கவில்லை. அவன் தவித்துப் போனான்

"அப்போ நான் என்ன செய்யட்டும், ரஞ்சிதம்?" என்று கேட்டான்.

"நீங்கள் கொழும்பில் ஏதாவது ஒரு உத்தியோகம் பார்த்துக்கொண்டு இங்குதானே தாமதிக்கவேண்டும். நீங்கள் என்னை விட்டுப் போனால் என உயிரே போய்விடும்..........."

"ரஞ்சி, இத்தனை காலமும் என்னுடன் பழகியும் என் மனோநிலையை நீ அறியாதவள்போல பேசுகிறாயே படிப்பதும் பட்டம் பெறுவதும் உத்தியோகம் பார்ப்பதும் என் லட்சியங்களல்ல.

"மாட்டேன், ரஞ்சிதம். பெரியவாள் மனதைப் புண்படுத்தாமல் ஏதோ அப்பாவின் ஆசைக்காகப் படித்தேன் பரீட்சை எழுதினேன் எனது சகோதரர்களான இந்தியத் தொழிலாளிகளுக்கு சேவைசெய்து அவர்களின் மதிப்பையும் அந்தஸ்தையும் உயர்த்த வேண்டும். அவர்கள் பாமரராய் விலங்குகளாய் வாழாமல் மனிதர்களாக வாழச் செய்ய வேண்டுமென்பதே எனது வாழ்க்கையின் லட்சியம். அந்த லட்சியத்தை அடைவதற்காக பூர்வாங்க வேலைத் திட்டங்களை முதலில் ஆரம்பிக்கவிருக்கின்றேன் அதில் உனது ஒத்தாசை தேவைப்பட்டால் நான் கேட்பேன். எனது லட்சியம் கைகூடாமல் நான் கல்யாணம் செய்துகொண்டு பயனில்லை அதனால் நீயும் சுகப்படமாட்டாய். காலம் எத்தனை எத்தனையோ மாறுதல்களை உண்டுபண்ணவில்லையா? காலம் போகப் போக அப்பாவுக்கு எனது காரியங்கள் பிடித்தாலும் பிடிக்கும் அப்பொழுது உன்னை நான் மனைவியாக்கிக்கொள்ள அவர் சம்மதித்தாலும் சம்மதிக்கலாம். ஆதலால் அவசரப்படாதே, ரஞ்சி. மனத் தைரியத்துடன் இரு காலம் நமக்கு வழிகாட்டும்" என்று ஆவேசம் வந்தவன்போல் பேசினான் சுந்தரம்.

பின்பும் நீண்ட நேரம் இருவருக்கும் சம்பாஷணை நடந்தது. காதல் பிரயபிய மொழிகள் அபரிமிதமாக அள்ளி வீசப்பட்டன. முடிவில் வாராவாரம் தவறாமல் சுந்தரம் கொழும்புக்கு வந்து குறிப்பிட்ட இடத்தில் ரஞ்சிதத்தைச் சந்திப்பது என்று முடிவுசெய்யப்பட்டது இருவரும் பிரிந்து போவதற்கு எழுந்து ஒருவரை ஒருவர் வாஞ்சையோடு பார்த்துக் கொண்டார்கள் அப்போது சட்டைப் பையில் இருந்து ஒரு சின்னஞ் சிறிய பெட்டியை எடுத்து, ரஞ்சிதத்தின் வலது கரத்தை எட்டிப் பிடித்து அதனுள் திணித்தான் சுந்தரம். ரஞ்சிதம் அப் பெட்டியைத் திறந்து பார்த்தாள் அவள் முகத்தில் மலர்ச்சியின் ரேகை கோடிட்டது

"இது என் அன்பளிப்பு, ரஞ்சிதம்" என்றான் சுந்தரம்.

"அப்படியானால் நான் உங்களுக்கு என்ன தரப் போகிறேன்?" என்று கேட்டாள் ரஞ்சிதம்.

"நீ என்ன தராவிட்டாலும் உன் தந்தை எனக்கு எதையோ கொடுக்கத்தானேபோகிறார்?"

"அவர் எதைக் கொடுப்பார்?"

"ரஞ்சிதத்தை!"

இருவரும் சிரித்தார்கள். ஆனால் அதற்கிடையில் தன் கையில் இருந்த புத்தகங்களில் ஒன்றை ரஞ்சிதம் நீட்டினாள்.

அதை சுந்தரம் வாங்கிப் புரட்டினான். "என் சுந்தரத்திற்கு—ரஞ்சிதம்" என்று அதில் எழுதப்பட்டிருந்தது. அடுத்தபக்கத்தையும் புரட்டியபோது "புரட்சிக் கவி பாரதிதாஸன் கவிதைகள்" என்ற சொற்கள் அங்கு காணப்பட்டன.

* * *

சுந்தரமும் ரஞ்சிதமும் அங்கிருந்து பிரியும்போது அதுவரை அவர்கள் சம்பாஷணையை மரப் புதரின் மறு பக்கத்திலிருந்து ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த சதாசிவமும் சந்தடியில்லாமல் எதிர்ப் பாதையினால் வெளியேறினான். சதாசிவமும் ஒரு சர்வகலாசாலை மாணவன். அவனுக்கு நெடுநாளாக ரஞ்சிதத்தின் மீது கண். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவன் ரஞ்சிதத்தோடு பேசுவான், பல்லை இளிப்பான்; அசடு வழிய வழிப்பான் சர்வகலாசாலையில் இதெல்லாம் ரஞ்சிதம் இவனுடைய கோணங்கித்தனத்தை சட்டைசெய்வதில்லை. சுந்தரமும் ரஞ்சிதமும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனரென்பது சதாசிவத்துக்குத் தெரியும். யாழ்ப்பாணத்துப் பையன்கள் எத்தனையோ பேர் சர்வகலாசாலையில் இருக்கிறார்கள். ஏன்! சர்வசாதாரண விஷயங்கள். சதாசிவமும் யாழ்ப்பாணத்தவன். இவர்களை எல்லாம் விட்டுப்போட்டு ரஞ்சிதம் ஒரு தோட்டக் காட்டுக் கங்காணியின் மகனைச் சுற்றுவது சதாசிவத்துக்குப்பிடிக்கவில்லை. ரஞ்சிதத்தின் அழகும் நிறமும் படிப்பும் குணமும் சதாசிவத்துக்குப் பெரிதாகப்படவில்லை அவளுடைய தகப்பன் வைத்திருக்கும் பணம்தான் அவனை ஆகர்ஷித்தது. ரஞ்சிதத்தை கல்யாணம் செய்து கொண்டால் அத்தனை ஆஸ்திக்கும் அவனல்லவா அதிபதி இந்த ஒரு எண்ணம் தான் அவனை ரஞ்சிதத்துடன் காதல் பண்ணத்தூண்டியது. ஆனால் அவள் அசைந்து கொடுத்தால் தானே! சுந்தரமும் அவனுக்குப் போட்டியாக நடுவில் நுழைந்து கொண்டான். சதாசிவத்துக்கு இது பெரும் சங்கடமாக இருந்தது.

இன்றைய சர்வகலாசாலைகள் வெறும் கலைக்கூடங்களாக மாத்திரம் இருக்கவில்லை காதல் பண்ணைகளாகவும் இருக்கின்றன.

சர்வகலாசாலைகள் மாத்திரமா? இந்த உலகத்தில் காதல் இல்லாத இடமில்லை, குடும்பம் ஒன்றைத் தவிர கடற்கரையிலும் ஆற்றோரத்திலும் கிணற்றடியிலும் டிராமிலும், ரயிலிலும் காதல் கதையிலும் காவியத்திலும் காதல், சினிமாவிலும் காதல்; சிற்பத்திலும் சித்திரத்திலும் காதல்; யுத்த களத்திலும் வேலைத் தலத்திலும் காதல் ஆனால் வீட்டிலும் குடும்பத்திலும் காதல் இல்லை, எங்கும் நிறை நாதப்பிரம்மமாக இருக்கும் காதல் கல்யாணம் கட்டிக்கொண்டு கணவன் மனைவியாக வாழ்பவர்களோடுமாத்திரம் "கண்ணாமூஞ்சி" விளையாடுகிறது. குழந்தைப் பருவம் முதல் வாலிப வயதுவரை ஒன்றாகப் பழகி, விளையாடிப் படித்துக் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டவர்களைக்கூட காதல் நடுவழியில் கைவிட்டு விடுகிறது

ரஞ்சிதம் சுந்தரத்தைக் காதலிக்கிறாள் என்று தெரிந்த பின்னருங்கூட சதாசிவத்துக்கு ரஞ்சிதத்தைமறக்க மனம்வரவில்லை. ரஞ்சிதம் சம்மதித்தால் அம்பலவாணர் மறுக்க மாட்டாரென்பதும் அவனுக்குத் தெரியும் அதனால் அவன் ரஞ்சிதத்தை சுந்தரத்திடமிருந்து பிரித்து தன் வசப்படுத்துவதற்குப் பெரு முயற்சி செய்தான். சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் ரஞ்சிதத்தைக் கண்டு பேசினான். ரஞ்சிதம் எங்கே போகிறாள்? என்ன செய்கிறாள்? யாரோடு உறவாடுகிறாள் என்பதையெல்லாம் அவனுக்குத் தெரியாமல் மறைந்திருந்து கவனித்து வந்தான்

விடுமுறைக்கு முதல்நாள சுந்தரமும் ரஞ்சிதமும் சந்தித்து சம்பாஷித்துக் கொண்டிருந்ததை மறைந்திருந்து கேட்டதும் அவ்விருவரையும்பிரித்துவைப்பதற்கு சதாசிவத்தின் மூளையில் ஒரு அபூர்வ யோசனை உதயமாயிற்று. சுந்தரம் ஒரு யாழ்ப்பாணத்துப் பெண்ணைக் காதலிப்பதையும் கல்யாணம் செய்வதையும் அவனுடைய தகப்பனான மாரிமுத்துக் கங்காணி ஆமோதிக்கமாட்டாரென்பதை சுந்தரத்தின் வாயிலிருந்தே தெரிந்துகொண்டான். ஆகவே இவ்விருவரினதும் காதல் விவகாரத்தை ஒரு மொட்டைக் கடிதம்மூலமாக மாரிமுத்துக் கங்காணிக்கு தெரியச் செய்தால் இவர்களின் உறவு நீங்குமென்று முடிவு செய்து உடனேயே ஒரு கடிதமெழுதி மாரிமுத்து கங்காணியின் விலாசத்துக்கு அனுப்பினான்.

(தொடரும்)



"ரஞ்சி, படிப்பதும்பட்டம்பெறுவதும் உத்தியோகம் பார்ப்பதும் என் லட்சியங்களல்ல. எனது சகோதரர்களான இந்தியத் தொழிலாளிகளுக்கு சேவைசெய்து அவர்களின் மதிப்பையும் அந்தஸ்தையும் உயர்த்த வேண்டும். அவர்கள் பாமரராய் விலங்குகளாய் வாழாமல் மனிதர்களாக வாழச் செய்ய வேண்டும் இதுவே எனது வாழ்க்கை லட்சியம்."

பாரதத்தேவி
தெனாலுட்டின்
தலைசிறந்த தமிழ்
தினசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வார்கள்

## யூதர்களுக்கு ஹிட்லர் செய்ததை இந்தியர்களுக்கு யு. என். பி. செய்கிறது

### பாராளுமன்றத்தில் சுந்தரலிங்கம்

தோட்டத் தொழிலாளர்களை அடிமைகளாக வைத்திருக்கவே நீங்கள் அவர்களுடைய குடியியல்-மனித உரிமைகளைப் பறிமுதல் செய்திருக்கிறீர்கள் அவர்கள் மட்டுங் கட்டுப்பாட்டோடும், உறுதியோடும் வாரம் மூன்று நாட்களுக்கு வேலை நிறுத்தம் செய்வார்களானால் இந்த அரசாங்கத்தை முழங்காலில் பணியவைக்கமுடியுமென்று கூறுகிறேன் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய மனித உரிமைகளைப் பெறுவதற்காக அவர்கள் வேலைநிறுத்தம் செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன் அவர்கள் வேலை நிறுத்தம் செய்வார்களென்றும் நினைக்கிறேன் என்று சமீபத்தில் ஜனப் பிரதிநிதிகள் சபையில் வவுனியா பிரதிநிதி திரு ஸி சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

இந்த சமயத்தில் "அவர்கள் (இந்தியர்கள்) இந்தியாவுக்குப் போகட்டும்" என்று அரசாங்க கட்சி குரல்கள் ஒலித்தன.

அதற்கு திரு சுந்தரலிங்கம்: சுடச்சுட 'அவர்கள் இந்தியாவுக்குப் போகமாட்டார்கள் போகவும் விருப்பமில்லை. அவர்கள் இங்கு பிறந்தவர்கள் என்று உரத்த குரலில் பதிலளித்தார்

மேலும் அவர் பேசியதாவது:—

இந்த 5 வருடகாலத்திலும் இரண்டு லட்சம் வாக்காளர்களின் பெயர்களைத் தேர்தல் இடாப்பிலிருந்து நீக்கியிருக்கிறார்கள்.

அரசாங்க கட்சியினர்: "இலங்கையரல்ல,"

திரு சுந்தரலிங்கம்: அந்த விஷயத்துக்குவருகிறேன். இலங்கையிலே பிறந்து வளர்ந்த லட்சக்கணக்கானோரின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த லட்சக்கணக்கானோர் இந்தியாவின் பிரஜைகளேயல்ல. இந்திய அரசியல் சட்டப்படி அவர்களில் ஒருவர்தானும் இந்தியப் பிரஜையாகமுடியாது. அப்படியானால் அவர்கள் எந்த நாட்டுப்பிரஜைகள்? இதை நமது அரசாங்கம் அறியுமா?

#### இதுவா ஜனநாயகம்

மூன்று தலைமுறைகளுக்கதிகமாக இந்தியத் தொழிலாளர்கள் இங்கு வசித்து இலங்கையின் பொருளாதார சுபீட்சத் திற்காக மெய்வருந்தி உழைத்திருக்கிறார்கள். இலங்கையின் அபிவிருத்திக்கு, முன்னேற்றத்திற்கு அவர்கள் செய்த சேவை மகத்தானது. அத்தகைய அப்பாவி மக்களை நீ இந்த நாட்டின் பிரஜையா நிரூபி என்று கேட்பது ஜனநாயகமாகுமா? இம்மாதிரி சட்டம் அமுலிலிருக்கும் நாடு உலகத்தில் ஒன்றுமே கிடையாது.

#### ஹிட்லரின் பாதை

தென்னாபிரிக்காவில் டாக்டர் மலான்கூட இந்தியர், ஆபிரிக்கர், கறுப்பர்களின் வாக்குரிமைகளைப் பறிக்கவில்லை. அவர்களை ஒரு பகுதியில் ஒதுக்கி வைக்கவே அவர் விரும்புகிறார். இங்கு இந்த எட்டு லட்சம் இந்தியர்களின் ஜனநாயக உரிமைக்கு—மக்கள் குடியியல் அந்தஸ்துக்கு என்ன நேர்ந்தது என்று கேட்கிறேன்.

மார்க்ஸியவாதிகள் நிலச்சுவான்தாரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்துவிடுவார்களென்று கூப்பாடுபோடும் நீங்கள் என்ன செய்துவிட்டீர்கள்? மனிதனின் அடிப்படை உரிமைகளையும், பாத்தியதைகளையும் பறிமுதல் செய்திருக்கிறீர்கள். ஜெர்மனியில் யூதர்களுக்கு ஹிட்லர் செய்த அதே காரியத்தை நீங்கள் இங்கு இந்தியர்களுக்குச் செய்கிறீர்கள் நீங்கள் ஒவ்வொருவரும் ஹிட்லர்களென்று குற்றஞ் சாட்டுகிறேன்.

#### மரண முத்தம்!

மான்செஸ்டர்—

கிளார்க்ஸன் என்றவாலிபர் தம் காதலியான வில்லியை முத்தமிட்டவுடன் அவள் பிணமாகிவிட்டாள் உணர்ச்சி மிகுதியில் அவள் தலையில் உள்ள ரத்தக் குழாய் வெடித்து இந்த விபரீதம் ஏற்பட்டுவிட்டதாம்.


### கர்ப்பிணிக் கொலை

**"ஒரு விசித்திரமான கேஸ்!"**

"ஆமாம், விசித்திரமானது மட்டுமல்ல; பயங்கரமானதுகூட!"

"பவளச் சிலைபோன்ற தன் பத்தினித் தெய்வத்தை பதை பதைக்கக்கொல்லும் பாவிகள் விகாடிக்கு விகாடி பெருகிவருகிறார்கள்!"

"கொலையா? அதுவும் கர்ப்பிணியை? பணக்கார வீரபத்திரரின் மனைவியை?

"பிரசவமான முன்பா? பின்பா?"

'பிரசவ சமயத்தில் தான்!"

"குழந்தை என்னவாயிற்று?"

"இறந்துவிட்டதாக சொல்லப்படுகிறது!"

"பிரசவமானபின் குழந்தையையும் அவளையும் கொலை செய்திருக்கிறார்கள்!"

கொலை செய்தது யார்? கொலையைக் கண்டுபிடித்துக் கூறிய டாக்டருக்கு ஆறு வருஷக் கடுங்காவல்? இந்த விபரங்களை சம்சாரம் ஜூலை இதழில் காணலாம் 56 சத ஸ்டாம்பு அனுப்பி தபாலில் பெறலாம். விலாசம் மோகன் & கோ லிமிட்; த. பெ. 964 கொழும்பு.

(Advt)



## சரீர சக்தி குன்றி-பலம் குறைந்து அவதிப்படுவோர்களுக்கு இரு அனுபவ சஞ்சீவிகள்

| | |
|---|---|
| 1 அமிர்த சஞ்சீவி லேகியம் | 20 நாள் 40 வேளைக்கு ரூ 12-50 |
| 2 பஞ்சலோக செந்தூரம் | 20 நாள் 40 வேளைக்கு ரூ 20-00 |
| தபாற் செலவுடன் இரு மருந்துகளும் | விலை ரூ 32-50 |

### உலக வாழ்நாட்களில் சந்தோஷமின்றியும், சுகமற்றும் ஜீவிக்கக் காரணம்



நன்மை தீமை எனக்கூறும் பகுத்தறிவைப் பாழ்படுத்திச் சரீர சுகத்தையும் கவனியாது—அளவுமிஞ்சி சரீர சக்திக்குமேலாக பலவிதமான துர்ப்பழக்கங்களைக் கையாடியும், அனுவசியமான லாகிரி, போதை உபயோகித்தும், கடுமையான வேலை உழைப்பாலும் சரீரத்தில் மூலஉஷ்ணம்ஏற்பட்டு, மலம் சிக்கலபட்டு, ஜீரண சக்தி உண்டாக்கும் திரவகம் குறைந்து, தேகசக்தியை இழந்து, காசம், ஈளை, இருமல், மூலம், பீனிசம், தாது நஷ்டம, இந்திரிய ஸ்கலிதம், வாதம், வாய்வு, பாரிசவாய்வு, பாண்டு, பிரமேக வெட்டை வியாதிகளால் துன்பமடைவோர்களுக்குத் தேவாமிர்தம்.

வியாதியஸ்தர்களே!

கொழும்பு செட்டியார் தெருவில் புகழ்பெற்ற மலையாள மெடிக்கல் ஹாலின் பிரதம வைத்தியரைச் சந்தியுங்கள். கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக வைத்தியம் செய்து அனுபவமுடையவர்கள், நான்கு தலைமுறையாக வைத்தியம் செய்து வரும் இவர்களின் பரம்பரை வைத்தியத்தைப்பற்றி அதிகமாக எழுத வேண்டியதில்லை.

ஒவ்வொரு மாதமும் 18ம் திகதிமுதல் மறு மாதம் 9ம் திகதிவரையும் நேரில் கலந்துகொள்க.

இங்ஙனம்,

**ஆயுர்வேத டாக்டர் A. S. டேனியல்**

## மலையாள மெடிக்கல் ஹால்

179, செட்டியார் தெரு, கொழும்பு-11



## 'பாரததேவி"

(தமிழ்த் தினசரி)

நிர்வாக ஆசிரியர்: எம். பக்தவத்ஸலம்

(மாஜி மந்திரி)

திறமையும் செல்வாக்கும்வாய்ந்த புது நிர்வாகம் விமானப் பதிப்பு ஒவ்வொரு நாள் மாலை நாலு மணிக்கே கொழும்பில் கிடைக்கும் வெளியூர்களில ஏஜண்டுகள் தேவை விபரங்களுக்கு எழுதுக.

தனிப் பிரதி விலை ச. 10 மாத சந்தா ரூ. 3-50

சோல் ஏஜண்டுகள்:-

## மோகன்குமார் அண்கோ

66, 1/5, 1ம் குறுக்குத் தெரு, கொழும்பு.



ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாசம்
பீடியிற் சிறந்தது கமலா பீடியே

★

கமலா, லீலா பீடிகளும் பீடிக்குத் தேவையான நாகபூர், சிங்கூணி இலைகளும், ஆக்கூழ் நிறுபாணிபுகையிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. அவசியம் கவனிக்கப்படும்.

## கமலா ஸ்டோர்ஸ்

Proprietor S. V. பொன்னம்பலம்

15 செட்டியார் தெரு, கொழும்பு

போன்: 3597. தந்தி. தாமரை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கடமான சட்டத்தைத் திருத்துக!

## இலங்கையில்பிறந்தவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகளே

### மூன்று பாதிரிகளின் முக்கியமான திட்டங்கள்

தென்னபிரிக்கவிலே இந்தியர்களின் உரிமைகளுக்காக சங் ஸ்கொட் என்ற பாதிரியார் போராடுவது அனைவருக்கும் தெரியும். அதே மாதிரி நம் நாட்டிலும் ஒரு "ஸ்கொட்" தோன்றியிருக்கிறார். அவர்தான் சங். எரிக் எல். ரொபின்சன். அவர் இதற்கு முன்பும் இலங்கை—இந்தியர்களின் கோரிக்கைகளையும், சத்தியாக்கிரகத்தையும் ஆதரித்து கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

சங். டப்ளியு. எம் பி. ஜயதுங்க. சங். ஸி. எச். ரத்னாயக்கா, சங் எரிக் எல் ரொபின்சன் ஆகிய வெவ்வேறு கிருஸ்து மதப் பகுதிகளைச் சேர்ந்த மூன்று மத குருக்கள் "டைம்ஸ்" பத்திரிகையில் "ராமசாமியின் உரிமைகள்" என்ற தலைப்புடன் கூட்டாக எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் கீழே தரப்படுகிறது.

விவாதத்திற்குரிய, நுட்பமான ஒரு பிரச்னையைப் பற்றி நாங்கள் எழுதுகிறோம் வாக்குரிமை இழந்த இரண்டு லட்சம் இலங்கை இந்தியரின் அபிப்பிராயம் இதுவரை இலங்கைப் பத்திரிகைகளில் சரிவரப் பிரசுரமாகவில்லை. ஆகவே நாங்கள் அதைப் பற்றி எழுதவேண்டுமென்று உணருகின்றோம்.

இப் பிரச்னையைப் பற்றிய இலங்கை-இந்தியரின் தாவா நியாயமானதென்பதை நாங்கள் ஒப்புக் கொள்கின்றோம். எங்கள் சொந்தப் பொறுப்பிலேயே இதனை எழுதுகின்றோம்.

### சந்தர்ப்பம்

முந்திய தேர்தலில் வாக்களித்த இரண்டு லட்சம் பேர்களின் வாக்குரிமையைப் பாகுபாடுள்ள சட்டத்தின்மூலம் ரத்துச்செய்ததைக்கண்டு, அதனை ஆட்சேபித்து, குரல் எழுப்ப வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டதென்று நாங்கள் கருதுகின்றோம்.

வாக்குரிமைப் பறிமுதல் தற்காலிகமானதென்றும், இலங்கை-இந்தியர் காங்கிரஸ்தான் இந்த நிலைமையை உண்டாக்கியதென்றும், வழக்கமாக கூறப்படுகிறது. பொதுவான நம்பிக்கையும் அதுவே காங்கிரஸ் பிரஜாவுரிமைச்சட்டத்தைப் பகிஷ்கரித்தது உண்மையே.

உண்மைக் காரணங்களை ஆராய்வோம்:

பகிஷ்காரம் 7 மாதங்கள் நடைபெற்றன. இதனால் 1950 ஜூன் முதல் 1951 நவம்பர்வரை 17 மாதங்கள் பிரஜாவுரிமை கோரி மனுச் செய்வதற்கு அவகாசமிருந்தது 7 லட்சம் மனுதார்களின் பெயர்களடங்கிய 2,27,000 மனுக்கள் அனுப்பப்பட்டன. ஆனால் பகிஷ்காரத்தை அசட்டைசெய்து, 1949 நவம்பர் மாதத்திற்கும் 1950 ஜூன் மாதத்திற்குமிடையே மனுச்செய்து கொண்டவர்களின் மனுக்கள்கூட இன்னும் பைசல் செய்யப்படவில்லை.

### விதிகள்

சட்டம் ஏன் பகிஷ்காரம் செய்யப்பட்டது? பதிவுப் பிரஜாவுரிமை பெறுவதற்கு இந்தியர்களுக்கு ஆசை காட்டுவதைப்போன்று அச்சட்டம் காணப்பட்டாலும், உண்மையில் அவர்களது நோக்கம் நிறைவேறுமலடிப்பதற்காக திறமையாக இயற்றப்பட்ட விதிகள் அந்தச் சட்டத்தில் அடங்கி இருக்கின்றன. பிரஜாவுரிமை அடைவதற்கு வாசலைத் திறந்துவிடுவதற்குப் பதிலாக பெரும்பாலான மனுதார்களை ஏமாற்றுவதற்காக வேண்டுமென்றே இந்தச் சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது.

(1) 1948 ம் வருடப் பிரஜாவுரிமைச் சட்டப்படி, (4) 1949 ஆகஸ்டு 5 ந் தேதிக்குமுன்பு பிறந்த ஒருவர் இலங்கையில் வம்சாவளிப்பிரஜையாகவேண்டுமானால்,

> சங். டப்ளியு. எம். பி. ஜயதுங்க
> சங். ஸி. எச். ரத்னயக்க
> சங். எரிக். எல். ரொபின்சன்

எழுதுவது

(அ) அவருடைய தந்தை இலங்கையில் பிறந்திருக்க வேண்டும் அல்லது

(ஆ) அவருடைய தந்தை வழிப் பாட்டன் அல்லது பூட்டன் இலங்கையில் பிறந்திருக்கவேண்டும்.

(2) மேற்கூறிய தேதிக்குமுன்பு வெளிநாட்டில் பிறந்த ஒருவர் இலங்கை வம்சாவளிப் பிரஜாவுரிமை பெறவேண்டுமானால்,

(அ) அவரது தந்தையும் தந்தையின் தந்தையும் இலங்கையில் பிறந்திருக்க வேண்டும் அல்லது

(ஆ) அவரது தந்தை வழி பாட்டனும் பூட்டனும் இலங்கையில் பிறந்திருக்கவேண்டும்.

பொதுவாக, ஒரு நாட்டிலேபிறந்தவன் அந்நாட்டுப் பிரஜையாகிவிடுவதுதான் வழக்கம். ஆனால் இலங்கையில் அல்ல. இங்கே "வம்சாவளி" என்ற சோதனை நடத்தப்படுகிறது. இச் சோதனையில் அதிகாரிகளைத் திருப்திபடுத்துவது, ஒருவர் இங்கு பிறந்ததைவிட கடினமாகிவிடுகிறது. மனுதாருடைய தகப்பனார் பிறந்த இடத்தை தஸ்தாவேஜு சாட்சியங்களுடன் நிரூபித்தல் சுலபமன்று. இனனும பாட்டனார், பூட்டனார் பிறந்த இடங்கள், தேதிகளை நிரூபிப்பதென்றால், அது சாத்தியமா என்பதைக் கேட்கவே வேண்டாம். (1897 வரை பிறப்பைப் பதிவு செய்யவேண்டுமென்ற கட்டாயமிருக்கவில்லை) எவ்வளவுதூரம் இது அசாத்தியமாகிவிட்டதென்றால், பாட்டன் பூட்டன் இங்குதான் பிறந்தார்களென்று நிரூபிக்கும்படி கேட்பது வெறும் கேலிக் கூத்தாகிவிட்டது.

### அவர்களின் சாதனை

இம் மாதிரி சோதனை சிங்களவரிடமும் நடத்தப்பட்டால் பதினாயிரக் கணக்கான சிங்களவர்கள் பிரஜாவுரிமை இழந்துவிடுவார்களென்பதில்சந்தேகமில்லை.

பிரஜாவுரிமைச் சட்டத்தின் நோக்கம் இலங்கை-இந்தியர்களைப் பிரஜைகளாக்குவதல்ல, ஆனால் அவர்களுக்கு பிரஜாவுரிமையை மறுப்பது என்று தெளிவாகிவிட்டது "அன்னியர்கள்" பிரஜைகளாகாமல் தடை செய்வதே சட்டத்தின் நோக்கமென்று அரசாங்கம் இதற்கு பதிலளிக்கிறது. ஆனால் தாய் தந்தையர்களும், பாட்டன் பாட்டிகளும் இந் நாட்டிலே பிறந்து, இங்கேயே இறந்து போன; தங்கள் வாழ்க்கையிலே இந் நாட்டைவிட்டு வெளியேறாத லட்சக்கணக்கானவர்கள் எப்படி "அன்னியர்கள்" ஆகிவிட்டார்களென்பது நமக்குப் புரியவில்லை

மேலும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக அவர்கள் செய்த மகத்தான சாதனைகளை நாம் என்றும் மறந்துவிட முடியாது. இன்னும் தேசிய வருவாயில் 65 சதவிகிதம் உழைத்துச் சம்பாதித்துக் கொடுப்பவர்கள் அவர்களே. உழைப்பின் வாயிலாக பிரஜைகளாவதற்குரிய உரிமைகளை அவர்கள் பெற்றிருக்கிறார்களென்று நாங்கள் உணருகின்றோம்.

முந்திய பிரஜாவுரிமைச் சட்டத்தின்மூலம பிரஜைகளாக முடியாதவர்கள் பிரஜாவுரிமை பெற்றுக்கொள்வதற்காக 1949 பெப்ரவரில் இப் புதிய பிரஜாவுரிமைச் சட்டம் இயற்றப் பெற்றது.

(இச் சட்டம் இயற்றப் படுவதை எதிர்த்து திரு சுந்தரலிங்கம் மந்திரி பதவியை ராஜினமாச் செய்தாரென்பது குறிப்பிடத்தக்கது)

ஒரு மணமான இலங்கை-இந்தியர் இச் சட்டத்திற்கிணங்கப் பிரஜையாவதெனறால், 1946 ஜனவரி 1ம் திகதிக்கு முன் 7 வருடங்களாக இலங்கையில் இருந்ததாக நிரூபிக்கவேண்டும். மனுதார் பிரமசாரியாக இருந்தால், —7 வருடங்களல்ல—10 வருடங்கள் இலங்கையிலிருந்ததாக நிரூபிக்க வேண்டும். இவ்விரு மனுதார்களும் தத்தம் மனு பரிசீலனை செய்யப்படும் தேதி வரை இலங்கையில் தொடர்ந்து வசித்ததாகவும் நிரூபித்தாக வேண்டும். ஆக இந்தத் தேதியையும் சேர்த்து கொண்டால், மணமான மனுதார் 1939 1952 வரையுள்ள 13 வருடங்களும் மணமாகாத மனுதார் 16 வருடங்களும் இலங்கையில் வசித்திருக்க வேண்டும்.

### சட்டத்தினுல் தடை

சட்டம் மேலாழ்ந்தவாரியாக ஆட்சேபனையில்லாததைப்போல தோன்றினும், நடைமுறையில் அது இலங்கை இந்தியர்கள் பிரஜைகளாவதைத் தடை செய்கிறது உதாரணமாக, இந்தியர்களின் சாதாரண பழக்கத்திற்கிணங்க சகோதரியின் மகளை மணமுடித்தவருக்கும், யாழ்ப்பாணத் தமிழர்களின் பொதுவான பழக்கத்திற்கேற்ப, சகோதரனின் மகளை மணமுடித்தவருக்கும் (சகோதரியின் மகனுக்கும்) இச்சட்டப்படி பிரஜாவுரிமை கிடையாது.

மனுதார் ஏககாலத்தில் சட்டத்தின் சகல விதிகளையும் திருப்தி செய்தாக வேண்டும் மேலும், மனுதார் இலங்கையில் நிரந்தர வாசி என்பதையும் நிரூபிக்க வேண்டும். மனுதார் ஏராளமான கேள்விகளுக்குப் பதிலளிப்பதுடன் ஒரு சத்தியக் கடுதாசியும் கொடுக்கவேண்டும் இதெல்லாம் சுலபமான வேலையல்ல என்பது "ராமசாமி"யைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

மனுக்களைப் பெற்றுக் கொண்ட கடைசித் தேதி 1951 நவம்பர் முதலாந் தேதியாகும். அதிலிருந்து எந்த ஒரு வருடத்திற்கும் ஒரு சில மனுதாருக்குதான் பிரஜாவுரிமை கொடுத்திருக்கலாம் வருடந்தோறும் 80 000 இந்தியர்கள் இலங்கைக்கு கள்ளத் தோணி மூலம் வருவதாகச் சொல்லபடுகிறது ஆனால் இதற்கு சாட்சியங்களில்லை. அவர்கள் இலங்கைப் பிரஜைகளாகவும் முடியாது. தேர்தலில் வாக்களிக்கவும் முடியாது.

இலங்கைவாழ் இந்தியர்களில் பெரும்பாலோர் இலங்கையைத் தாயகமாக கொண்டிருப்பினும் அவர்களில் எட்டில ஒருவர் தான் சட்டத்தின் கடினமான விதிகளை திருப்தி செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார். அரைகுறைக் கல்வி அறிவுள்ள இந்த மக்களுக்கு இச்சட்டம் மிகச் சிக்கலாக இருப்பதால், அவர்கள பிரஜைகளாக முடியாமல்போய்விடுகிறது.

### பயனில்லை

இத்துணை தொல்லைகளையும் கடந்து, ஒருவாறு பிரஜாவுரிமையைப் பெற்றுவிட்டாலும், அவர்கள் நிலச் சட்டத்திலிருந்து (அரசாங்க நிலம் இலவசமாகக் கொடுத்தல்) நீக்கப் பட்டுவிடுவார்கள். மீன் பிடிச் சட்டம் (மீன்பிடித் தொழிலுக்கு அரசாங்க உதவிப் பணமளித்தல்) பஸ் லைசன்ஸ் சட்டம் (பஸ் கம்பெனிகளில் பங்குதாராகும் உரிமை) முதலிய சலுகைகள் ஏனைய பிரஜைகளின் பிறப்புரிமையாகும். இது அநியாயமான, அக்கிரமமான பாகுபாடாகும் ஜனநாயகத்தையும் பொய்யாக்குவதாகும்.

இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது நியாயத்தின்பால் மக்களின் கவனத்தைத்திருப்ப இலங்கை இந்தியர் சத்தியாக்கிரகம் (சத்தியத்தின் சக்தி) செய்வது ஆச்சரியமல்ல என்பது புலனாகும். தேச மக்களின் மனச்சாட்சியைத் தூண்டுவதில் அவர்கள் எவ்வளவு ஒழுங்காகவும் சமாதானமாகவும் நடந்து கொள்கிறார்களென்பதுதான் ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. சில கொள்கையற்ற எதிரிகள் கூறுவதைப்போல கம்யூனிஸ்டுகளின் திட்டத்துடன் அவர்களின் திட்டங்களை அவர்கள் பிணைத்துக் கொள்ளவில்லை. கம்யூனிஸ்டுகளின் கொள்கைகளும் முறைகளும் இதற்கு முற்றிலும் முரணானவைகளே.

இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு எங்களின் ஆலோசனைகள் யாவை?

இலங்கை— இந்தியர்கள் இலங்கை ஜனத்தொகையில் 10ல் ஒரு பகுதியாகிவிட்டதால் சிங்களவர் உள்ளங்களில் அச்சம் ஏற்படுவது இயற்கையே இந்திய சமூகத்தினிடமிருந்து ஏற்படக் கூடிய அபாயத்தைத் தவிர்ப்பதற்குள்ள திறமையான ராஜதந்திரவழி அவர்களுக்கு மீண்டும் பிரஜாவுரிமை அளித்து அவர்களை நாட்டு மக்களுடன் பிணைத்து விடுவதுதான். அதனால் இலஙகைதான் தாயகம் என்ற உணர்ச்சியும் விஸ்வாசமும் அவர்களுககு ஏற்படும்.

### நடைமுறை அரசியல்

அவர்களை அநியாக நடத்துவது, இலங்கை அரசியலிலே மிகக அபாயகரமான நிலைமையை ஏற்படுத்துவதாகும். இலங்கையர்களுக்கு வழககமாக உள்ள "விருந்தோம்பல்" குணத்திற்கேற்ப, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்குவதின் மூலம பல நூற்றாண்டுகளுககு அவர்களின் நறபைப்பெற முடியம். இதனால் அபாயம் ஏற்படக்கூடிய நிலையும் மாறிவிடும். "நிறைந்த அன்பு அச்சத்தை ஒழிக்கும்" என்பது பைபல வாக்கியமாகும.

நடைமுறை அரசியலில் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்படவேணடும்

(1) 1948க்கு முனபிருந்ததைப்போல பிரஜைகள் என்று கருதப்படுபவர்களுக்கு வாக்குரிமை மீண்டும் அளித்தல.

(2) ஏனைய நாடுகளைப்

[11-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிய வாழ்க்கையும் இஸ்லாமும்

(சென்ற வார தொடர்ச்சி)

மனித இயற்கை பேராசையுள்ளதுதான். அலங்கார சாமான்களும் பிரவிர்த்திகளும் அதிகப்பட்டுக்கொண்டுச் செல்லச் செல்ல மனிதர்களின் உணர்ச்சியும் இன்னமும் அதிகப்பட்டுக்கொண்டேதான் செல்லும். யான் கூறும் இவ்விஷயம் அனுபவத்தில் கண்ட உண்மை. இது உண்மைக்கு மாற்றமானது என்று கூறுபவர் ஞானமற்றவர் என்று கொள்ளப்படுதல் வேண்டும். நேர்வழித் தூதர் முஹம்மத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மனிதர்களுக்கு சர்வசாதாரண முறையையும், திட்டத்தையும் போதித்துச் சென்றார்கள் தாங்களும் அப்படியே நடந்தும் காட்டினார்கள். மேலான இவ்வுபதேசத்தை கைக்கொண்டு நடந்து வந்த மட்டும், முஸ்லிம்கள் உலகத் தலைவர்களாய் விளங்கினின்றனர். அகிலத்தார் இவர்களைப் போற்றவும் செய்தனர். சர்வசாதாரண பழக்கத்தையும், வழக்கத்தையும், நடைமுறையையும், உணவையும் முஸ்லிம்கள் விட்டுவிட்ட பின், தங்கள் அதிகாரம் போயிற்று; கௌரவமும் மறைந்திற்று; கண்ணியமும் ஒழிந்தது. குடும்ப வாழ்க்கையின் ஒவ்வொரு முறையையும் எம்பிரான் முஹம்மத் (ஸல்) எடுத்துக்காட்டியே சென்றிருக்கின்றனர். இத்தகைய சற்குண எளிய வாழ்க்கை முறையினாலே அகில மக்களை கவர முடியுமென்றும் அஹ்மது நபி (ஸல்) அவர்கள் உபதேசம் புரிந்துசென்றார்கள். உண்மையும் இதுதான். அத்தகைய எளிய வாழ்க்கை எத்தகையது என்பதை நமது சோதர சோதரிகள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விவாகம் பல புரிந்தார்கள். விவாகத்துக்குப் பின் வலிமாவென்னும் சந்தோஷ விருந்தும் செய்தார்கள். அவ்விருந்தில் தங்கள் தோழர்களான சஹாபாக்களெல்லாம் பாகுபாடின்றி கலந்துகொண்டார்கள். ஒவ்வொரு விவாகத்துக்குப் பின்னும் வலிமாவென்னும் விருந்து நடைபெற்றேயிருக்கின்றது சர்வ சாதாரண உணவே வலிமாவில் பரிமாறப்பட்டது. ஒரு முறை பேரீச்சம் பழத்தினாலேயே வலிமா நடைபெற்றது. மற்றொரு முறை கோதுமை மாவினால் செய்யப்பட்ட பதார்த்தமொன்று பரிமாறப்பட்டது. மற்றொரு விவாகத்துக்குப் பின் சர்வசாதாரண ரொட்டியும ஆணமும் கொடுக்கப்பட்டது. இன்னுமொரு விவாகத்துக்குப் பின் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டிலிருந்த ஆகாரங்களை எடுத்துக்கொண்டு வந்து ஒருங்கே அமர்ந்து தங்களிடையே பரிவர்த்தனையும் செய்துகொண்டனர். இப்படியும் ஒரு வலிமா நடைபெற்றது.

பின்னர் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்களது அருமை குமாரிகளுக்கு விவாகம செய்தனர் அவர்களுக்கு ஸ்ரீதனமும் அளித்தனர். அதன்மூலம் அகிலத்தார்களுக்கு அறிவும் புகட்டினர். எத்தகைய எளிய முறையில் ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டுமென்றும் எடுத்துக்காட்டினர். முஸ்லிம்களிடையே நேரிய ஆட்சி கிலாபத்தெராஷிதா முடிவடைந்துவிட்டபின் அரசாங்கம் அமர்களம் ஏற்பட்டது. அகில அலங்காரமும், அகிலத்தின் ஆசாபாசங்களும் அதிகமதிகம் பெருகிக்கொண்டே சென்று அவர்கள் அழிவுக்கே காரணமாய் இவை அமைந்தும் விட்டன.

இந்திய முஸ்லிம்கள் தங்கள் தேச மக்களின் (முஸ்லிமல்லாதார்) வழக்கங்களையும் சடங்குகளையும் பின்பற்றத் தொடங்கினர். அவர்களைப்போல் முஸ்லிம்களான இவர்களும், ஆடவும் பாடவும் அலங்காரம் புரியவும் துணிவுபூண்டனர். அன்னிய சமயத்தவர் விவாக ஊர்வலம் புரிகின்றனர்; நல்ல பெரிய குதிரைகளையும், நடனங்களையும், வாத்தியங்களையும், ஸ்ரீதனச் சாமான்களையும் அதிக ஆடம்பரத்துடன் அனுப்புகின்றனர். இதைக்கண்ட முஸ்லிம்களின் மனமும் மாறிற்று. அவர்களைப் போல் இவர்களும் நடக்கத் தொடங்கினர் சர்வ சாதாரண இஸ்லாத்தின் போதனா முறையை கைவிட்டுவிட்டனர். முஸ்லிம்கள் மேற்கண்ட கிரியைகளெல்லாம் தங்களுக்கு தகுதியான வகையில திருத்திக்கொண்டு இவர்களும் புரிய ஆரம்பித்தனர். ஹிந்து மதத்தைச் சார்ந்த ஒரு சேட் என்பவர் தனது தனத்துக்கு தக்க வகையில் தடபுடலுடன் தன் குமாரியின் விவாகத்தை செய்கிறார் என்றால், பக்கத்து வீட்டிலிருக்கும் ஒரு முஸ்லிம் தலைவர், சேட் குமாரியின் விவாக அலங்காரங்களைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்ய வேண்டுமென ஏற்பாடு செய்துவிடுகின்றார். பின்னர் வெள்ளியிலும், தங்கத்திலும், செல்வமும், தனமும் தண்ணீர்போல் தாராளமாய் செலவளிக்கப்படுகின்றன. சேட் என்பவர் ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஆடைகளையும், ஆபரணங்களையும் தளவாட சாமான்களையும் சேட் தன் குமாரிக்கு விவாகத்தினபோது அளித்தால், முஸலிம் தலைவர் தன் குமாரிக்கு அதைக்காட்டினும் அதிகமாகவே கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்கின்றார்

(தொடரும்)




# அஜ்-பகிஸ்தான் தொழிற்சாலை அபிவிர்த்தி

## ஒவ்வொரு உழைப்பாளியும் ஒரு நிபுணன்

அஜ்பக் என்பது ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு பாகம். இது பர்கானுவுக்குச் சமீபத்தில் ஓடிக்கொண்டிருக்கும் சையிர் என்னும் நதிக் கரையில் அமைந்திருக்கிறது இந்நதி ஆரால் கேஸ்பியன் மைதானத்தின் ஓரமாக ஓடுகிறது இந்நதிக்கரையில் கி. பி 1944ம் ஆண்டு அஜ்பக் என்னும் கிராமத்தில் சிறிய இரும்பு தொழிற்சாலையொன்று ஏற்படுத்தப்பட்டது. சோவியத் அரசாங்கமே இவ்வேலையைச் செய்தது. பின்னர் அரசாங்கமும் பொதுமக்களும் ஒத்துழைத்து இத்தொழிற்சாலையில் வேலை செய்து வந்தனர் இதன் பயனாய் இத் தொழிற்சாலை துரிதமாய் முன்னேற்றமடைந்தது. கி. பி 1944ம் ஆண்டில் இத்தொழிற்சாலையிலிருந்து போதிய வகையில் இரும்பு உற்பத்தியாயிற்று இதற்குப்பின் அஜ்பகிஸ்தான் தொழிற்சாலை நன்கு பெயர்பெற்று விளங்கத் தொடங்கிற்று. இத் தொழிற்சாலையிலிருந்து இந்த அஜ்பகிஸ்தான் பகுதிகளைச் சார்ந்த பெரியபெரிய தொழிற்சாலைகளிலிருந்தும் வேண்டிய விவசாயக் கருவிகளையும், நெசவுத் தொழிற்சாலைகளுக்கும் வேண்டிய இரும்பு சாமான்களும் நிறைய உற்பத்தியாகின்றன. இதுவுமல்லாமல் பெரிய பெரிய நிர்மாண வேலைக்கெல்லாம்கூட இந்த அஜ்பகிஸ்தான் தொழிற்

(15ம் பக்கம் பார்க்க)

# அண்டசராசரங்களின் அற்புத சிருஷ்டியை ஆராய்ந்தறிய ஆயத்தங்கள்

## உலகத்திலேயே மிகப்பெரிய ரேடியோ டெலஸ்கோப்

## நான்கு வருடங்களாக 3, 36, 000 பவுண் செலவில் கட்டப்படுகிறது!

மிகப் பழைய காலந்தொட்டே மனிதனின் உள்ளத்தில் தனது சிறிய உலகத்தைச் சுற்றியுள்ள அண்ட சராசரங்களின் அற்புத சிருஷ்டியைப்பற்றி அளவில்லா ஆச்சர்யமும், அதிசயமும் ஏற்பட்டு வந்திருக்கிறது. காலம் முன்னேற ஆகாய மண்டலத்தைப்பற்றி விஞ்ஞானம் மனிதனுக்கு அறிவூட்டிவரத் தொடங்கியது. வான சாஸ்திரம் லட்சக்கணக்கான மக்களின் பொழுது போக்கு கலையாகவும், அறிஞர்களின் வாழ்க்கை ஆராய்ச்சியாகவும் விளங்குகிறது.

தற்போது ரேடியோ வான சாஸ்திரம் என்ற புதிய விஞ்ஞானத்தின் மூலம் இதுவரை கண்டறியாத ஆகர்யப் பிராந்தியங்கள் விஞ்ஞானிகளுக்கு தெரிய அவகாசம்ஏற்பட்டிருக்கிறது இதையொட்டித்தான பிரிட்டனில், செஸ்ஷைரிலுள்ள ஜாட்ரால் பாங்க் என்னுமிடத்தில் உலகிலேயே மிகப் பெரிய ரேடியோ டெலஸ்கோப் ஒன்று கட்டப்பட்டு வருகிறது

இந்தப் புதிய விஞ்ஞானத்தின் கதை 1931ம் வருஷம் விஞ்ஞானியான ஜான்ஸ்கி என்பவர் ரேடியோ அலைகள் வான வெளியிலிருந்து பூமிக்கு வருகின்றன என்று கண்டு பிடித்தது முதல் ஆரம்பமாகிறது. அதுபோது இந்தக் கண்டுபிடிப்பைப்பற்றி அதிக கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால் இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் ராணுவத்திற்காக தயாரிக்கப்பட்ட மகசக்தி வாய்ந்த ரேடியோ ரேடார் சாதனங்களைக் கொண்டு மேற்படி ரேடியோ அலைகளின் காரணங்களை ஆராய ஆஸ்திரேலியாவிலும் இங்கிலாந்திலும் பல விஞ்ஞானிகள் முற்பட்டனர். ஆஸ்திரேலிய [illegible] ரேடியோ "நட்சத்திரங்கள்" என்பவை வானப் [illegible] முதல் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

1945-ம் வருடம் முதற்கொண்டு மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தின் பரீட்சார்த்த நிலையத்தில் இப்புதிய விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது—இந்த நிலையத்தை சர்க்காரின் விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி இலாகாவும் நப்பீல்டு ஸ்தாபனமும் நிதி மான்யம் கொடுத்து நடத்துகின்றன.

தற்போது மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் ஒரே திசையில் நிலைத்த ரேடியோ டெலஸ்கோப் [illegible] உபயோகிக்கப்பட்டு வருகிறது. இந்த டெலஸ்கோப்பைக் சுற்றிப்பார்க்க முடியாது. அதற்குப் பதிலாக வானத்திலுள்ள நட்சத்திரங்கள் டெலஸ்கோப் பார்க்கும் திசையில் வரும்வரை காத்திருக்கவேண்டும் என்றாலும் இதன் உதவியைக் கொண்டு சரித்திரத்திலேயே முதல் முதலாக பகலில் வானத்தில் நிகழும் நட்சத்திர நடமாட்டங்களை ஆராய்வது சாத்தியமாகியிருக்கிறது. அத்துடன் பூமியின் சூரிய வெளிச்சப் பகுதிகளின்மீது சாரி சாரியாக எரி நட்சத்திரங்கள் மோதுகின்றன என்பதும் தெரிய வைத்திருக்கிறது. ஹான்பரி பிரவுன், ஹாஸார்ட் என்ற இரு பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் இந்த டெலஸ்கோப்பின் உதவியினால் ஆண்டிநட்சத்திரக் கூட்டத்தை கணித்திருக்கின்றனர்.

தற்போது 3,36,000 பவுன் செலவில் நான்கு வருட காலத்தில் கட்டப்படவிருக்கும் புதிய உலகிலேயே மிகப்பெரிய ரேடியோ டெலஸ்கோப்பு வான மண்டலத்தை விரிவாக சுற்றிப் பார்க்கும்படியானது. இது மான்செஸ்டர் பல்கலை கழகத்தின் உபயோகத்துக்காகும்.

### மர்ம சமிக்ஞைகள்

அண்டத்தின் அதி தொலைப் பிராந்தியங்களிலிருந்து வரும் சமிக்ஞைகளை தற்போது பூமி திரட்டுகிறதே அவையென்ன? நமக்குத் தெரியாது. அவை பல நூறுகோடி வருஷங்களுக்கு முன் நட்சத்திரங்கள் சாகும்போது வெளியிட்ட ரேடியோ சக்தியாக இருக்கலாம்; அல்லது புதிதாக சிருஷ்டியாகும நட்சத்திரங்களின "குரல்"களாக இருக்கலாம்.

ஆனால் சூரியனுடைய வானமும ரேடியோ அலைகள் விடுக்கிறது என்பதும் இப்போது தெரிந்திருக்கிறது. இந்த ரேடியோ அலைகளை ஆராய்ந்தால சூரிய கணத்தின பகுதியைப் பற்றி புதிய தகவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### வெருகல் கொடியேற்றம்

ஐயா,

வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயில் கொடியேற்ற விழா யாழ்ப்பாணம் இரகுநாதய்யர் பஞ்சாங்கப்படி நிகழும் நந்தன வருஷம் ஆவணி மாதம் 8ந் திகதியே யாகும். இது விஷயமாகப் பொது ஜனங்கள் இடர்ப்படாவண்ணம் தங்கள் பத்திரிகை மூலம் ஆவணி மாதம் 8ந் திகதி (23-8-52) யே கொடியேற்றமென்பதை ஊர்ஜிதப் படுத்தும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வ. சித்திரவேலு
மனேஜர்
ஸ்ரீ சித்திர வேலாயுத
சுவாமி கோயில்
வெருகல்

### ஆசிரியர் சங்க நிகழ்ச்சி

ஐயா,

6-7-52ல் வெளியான தங்கள் சுதந்திரன் பத்திரிகையில் 29-6-52ல் நடைபெற்ற அ. இ. த. ஆ. சங்க நிர்வாக சபை நிகழ்ச்சியைப்பற்றி முரணான, திரித்துக் கூறப்பட்ட அறிக்கையொன்று வெளிவந்த விஷயம் பலமாகாண சங்க நிர்வாகிகளால் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. ஆராய்ந்த அளவில் அதில் கூறப்பட்டுள்ள விஷயங்களில் பல 'மிகைபடக் கூறல், மாறுகொளக் கூறல்' என்னும் குற்றங்களுக்கிலக்காயிருந்தமை கண்டு ஆச்சரியமடைந்தேன்.

பிழையான பண்பான் மையுடன் வெளியான இவ் விஷயத்துக்கு கண்டனம் தெரிவித்து ஓர் பகிரங்க அறிக்கை விடுக்க வேண்டுமென பாஷாண நிர்வாகிகளில் ஓர் சிலர் ஆலோசனை கூறியதுண்டு. என் மனமோ இதற்குச் சாதகமாயில்லை. ஏனெனில் "சமூக சேவையாளர்க்கு கிடைக்கும் பரிசு இத்தகையனவே' என்பதை யானறிவேன். பத்திரிகையில் வெளிவந்த அத்தனையும் சரியென ஒப்புக்கொள்ளவும் நான் தயாராயில்லை. சங்க கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய முறையில் சுயநலமுடைய, தவறு பிழைத்தும் கொண்ட பொறுப்புணர்ச்சியற்ற புல்லுருவியொன்று சமர்ப்பித்த பிழையான, பாரபட்ச அறிக்கையை நீங்கள் நம்பி உங்கள் பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரம் செய்தது வருந்தக்கூடிய விஷயம்.

ஜே. ஜே. எம். தங்கராசா
கௌரவ காரியதரிசி
அ. இ. த. ஆ. சங்கம்
சென்ற் ஜோசப் கல்லூரி
கொழும்பு-10


# சுதந்திரன்
SUTANTIRAN

194, தடாம் தெரு போன்: 3411

1952 ஜூலை மீ 27 உ


## சிங்கத்தின் முழக்கம்

இந்தியர் பிரஜா உரிமைச் சட்டத்தின் விளைவாக, இந்நாட்டைப் பொன்னுடாக்கிய இலங்கை இந்திய மக்கள் எட்டு லட்சத்தினர் உண்மை ஜனநாயகத்தின் ஜீவாதார உரிமைகளான குடியுரிமை வாக்குரிமை ஆகியவற்றை இழந்து, நிர்க்கதியுற்ற அனாதைகளாய் இங்கு அல்லல் படுகின்றனர்.

தங்கள் உரிமைகளை நிலைநாட்டும் பொருட்டு இந்த மக்கள் சத்தியாக்கிரகம் என்னும் அறப்போர் தொடுத்து இன்றோடு சுமார் 90 நாட்களாகின்றன. இந்த அறப்போர் இறுதி வெற்றிவரை தொடர்ந்து நடைபெறவும், இழந்த உரிமைகளை இலங்கை இந்தியர் திருப்பப் பெறவும் இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் உட்பட தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒத்தாசை புரியவேண்டும்.

இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் வேறு இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் வேறு என்று பிரித்துப் பார்ப்பது தவறாகும்.

இலங்கைத் தமிழர்களின் இரத்தச் சகோதரர்களே இந்தியத் தமிழர்கள். அவர்களின் உரிமைகள் தான் இவர்கள் உரிமைகளும். இன்று அவர்களுக்கு வந்துள்ள ஆபத்து நாளை இவர்களுக்கு வருமென்பது நிச்சயம்.

ஆகவே உரிமைகளுக்காக இன்று இலங்கை இந்தியர் நடத்தும் சத்தியாக்கிரக இயக்கம் முஸ்லிம் மக்கள் உட்பட இலங்கைத் தமிழ்ப் பேசும் இனத்தின் உரிமைப் போராட்டமே என்பதில் லவலேசமும் சந்தேகமிருக்கமுடியாது. "இந்தியர்கள் தானே போராடுகிறார்கள் அதனால் எங்களுக்கென்ன?" என்று வட இலங்கை தமிழ் மக்களும் கிழக்கு இலங்கைத் தமிழ் மக்களும் இதர பகுதியில் வாழும் தமிழ்பேசும் மக்களும் எண்ணுவார்களேயாகில் அவர்கள் தங்கள் சொந்த இனத்தையே அழிப்பதற்கு, தங்களது மரணத் தீர்ப்பில் தாங்களே கையெழுத்திட்டவர்களாவார்கள்.

ஆதலால் தமிழர்களின் உரிமைப் போராட்டமாகிய இந்த சத்தியாக்கிரக இயக்கத்தில் இலங்கை, இந்திய பாகுபாடின்றி தமிழர்கள் அனைவரும் முழுமூச்சுடன் பங்கெடுக்க வேண்டும். இலங்கைத் தமிழர்கள் பத்தியில் காந்திஜியின் போதனைகளில் நம்பிக்கை கொண்டவர்கள் ஏராளமாக உண்டு. காந்தி அடிகளின் வழிகளைப் பின்பற்றி ஸ்தாபிக்கப்பட்ட எத்தனையோ சேவா சங்கங்களும் உண்டு. இத்தகைய ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் கதர் ஜிப்பாவுக்குள் மறைந்துகொண்டு இடைவிடாது காந்திஜி பெயரையும் உச்சரித்துக்கொண்டு 'யாருக்கோ வந்த வினை' யென மௌனமாக உட்கார்ந்திருக்கக்கூடாது.

இவற்றையெல்லாம் உணர்ந்தே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் பாராளுமன்றத்துள்ளும் வெளியிலும் இலங்கை இந்தியப் பிரச்னைக்கு அளவற்ற அனுதாபம் காட்டிவருகின்றனர்.

வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் பேசிய தமிழ் அரசுக் கட்சி அங்கத்தினர் திரு வன்னியசிங்கம் இலங்கை இந்தியரின் கஷ்டங்களையும் கோரிக்கைகளையும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அவரைப் பாராட்டுகிறோம்.

கடந்த பாராளுமன்றத்தில் இலங்கை இந்தியரின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர்களுடைய சொந்தப் பிரதிநிதிகள் எழுவர் பாராளுமன்றத்திலே இருந்தார்கள். இலங்கை இந்தியர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதால் இம்முறை அவர்கள் பாராளுமன்றத்துள் பிரவேசிக்க முடியவில்லை.

எனவே இலங்கை இந்தியரின் குரல் பாராளுமன்றத்தில் கேட்காமல் செய்துவிட்டோம் என்று டட்லி யூ. என். பி யினர் பகற்கனவு கண்டிருக்கலாம். அவைகளையெல்லாம் திரு வன்னியசிங்கத்தின் முழக்கம் சிம்மகர்ஜனையாகக் கதிகலக்கியிருக்கும் என்றே நம்புகிறோம்.

திரு வன்னியசிங்கத்தின் இந்தப் பாராளுமன்றப் பேச்சை ஒவ்வொரு தமிழ் மகனும் வரிக்குவரி படிக்கவேண்டும். இலங்கைத் தமிழராயினும் சரி இலங்கை - இந்தியத் தமிழராயினும் சரி அல்லது தமிழ் பேசும் முஸ்லிமாயினும் சரி தவறாமல் படிக்க வேண்டும்.

அடுத்த வாரம் இப்பேச்சை முழுதாக 'சுதந்திரன்' வெளியிடும். தமிழ் மக்கள் காத்திருந்து வாங்கிப் படிப்பார்களாக.

## "என் ராஜினாமா சொந்த விஷயம் அதைப்பற்றி விவாதிக்க வேண்டாம்"

### சேர்ஜோனிடம் நல்லையா வேண்டுகோள்

தம் ராஜினாமா, கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக தாம் மேற்கொண்ட ஒரு சொந்த நடவடிக்கை என்றும் அதைப்பற்றி அரசாங்க பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் விவாதிக்கவேண்டிய அவசியம் எதுவும் கிடையாது என்றும் மாஜி தபால் தந்தி மந்திரி திரு நல்லையா சேர் ஜோன் கொத்தலாவலைக்கு அறிவித்ததாகத் தெரியவருகிறது.

அரசாங்கப் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் திரு நல்லையாவின் ராஜினாமா பற்றிய விவரங்களைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று திரு ஆர். ஈ. ஜயதிலகா ஒரு பிரேரணையை சமர்ப்பித்திருந்தார். ஆனால் அப் பிரேரணை விவாதிக்கப்படவில்லை. ஒரு மந்திரியை நியமிப்பதோ நீக்குவதோ பிரதம மந்திரியின் தனி உரிமைக்குட்பட்ட விஷயம் என்றும் அதைப் பற்றி இதர அங்கத்தவர்கள் விவாதிப்பதும் அபிப்பிராயம் தெரிவிப்பதும் முறைகேடானது என்றும் மேற்படி கூட்டத்தில் பிரதமர் திரு டட்லி சேனநாயகா கூறினாராம். அதன் பேரில் திரு ஆர். ஈ. ஜயதிலகா தமது பிரேரணையை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

திரு நல்லையாவுக்கு மூன்று மாதம் லீவு வழங்கப்படும் என்று அறியப்படுகிறது.

### தவறான போக்கை கைவிடுக!

நியமனப்பிரதிநிதி திரு எஸ். பி. வைத்திலிங்கத்திற்கு இலங்கை—இந்தியர் சார்பாக கண்டி நகர மண்டபத்தில் சமீபத்தில் ஒரு தோட்ட விருந்து அளிக்கப்பட்டது. அது விஷயமாக இலங்கை—இந்திய காங்கிரஸ் திரு வைத்திலிங்கத்திற்கு அனுப்பியுள்ள தந்தியில்,

"தங்களுக்கு அளிக்கப்படும் தோட்ட விருந்து பற்றி பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்தோம். அதற்கு ஒரு பிரதிநிதித்துவத் தன்மையை அளிக்கும் முறையில் தவறான போக்கில் இத்தகைய வரவேற்புகளைக் கொடுத்தல் இருக்கும் வேதனைக்கு அவமானத்தையும் சேர்ப்பதாகும். மத்திய மாகாண இந்திய சமூகத்தினரால் அளிக்கப்படுவதாகச் சொல்லப்படும் இவ் வரவேற்பை ஏற்பாடு செய்கிற இருவர்களில் ஒருவர் முன்பு ஒரு சமயம் பாராளுமன்றத் தேர்தலில் இந்தியர்களால் நிராகரிக்கப்பட்டவரென்பதும் மற்றவர் உங்கள் உறவினர் என்பதும் மக்களுக்குத் தெரியும்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

### உணவு கட்டுப்பாடு

#### அரிசி சமைக்கும் முறை

சமீபத்தில் இறக்குமதி செய்யப்பட்ட அமெரிக்க பச்சரிசியில் பசை சற்று கூடுதலாயிருப்பதாகக் காணப்படுவதால் அதைச் சமைப்பதில் வேறு வழிகளைக் கையாளுவது நல்லது. கீழ்க்கண்ட சில முறைகளைக் கையாளலாம்.

ஏ (1) அரிசியை முதலில் ஒரு மட்பாண்டத்தில் போட்டு சுமார் 5 நிமிஷம் வரை வறுக்க வேண்டும். இலேசான பழுப்பு நிறம் வந்தவுடன் வறுப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

(2) வறுத்த அரிசியை கொதி நீரில் போட வேண்டும். நன்கு கொதித்தபின் தண்ணீரை வடிகட்டி இளம் சூட்டில் மேற்கொண்டு சற்று நேரம் வைத்திருக்கவேண்டும். தண்ணீரை வடிகட்டு முன் அரிசி தேவைக்கதிகமாக கொதித்துவிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

(பி) அரிசியை தண்ணீரில் சில தடவைகள் கழுவி இடியாப்ப மாவை ஆவியில் வைப்பது போல், 15 நிமிஷம் ஆவியில் வைக்கவேண்டும். பின்னர் கீழே இறக்கிவைத்து சிறிது நேரத்திற்கெல்லாம் வழக்கப்படி சமையல் செய்து கொள்ளலாம். சரியாக கொதிக்கும் தருணத்தில் கஞ்சியை வடிகட்டுவது மிகவும் நல்லது.

(மேலே (ஏ) பிரிவில் கூறப்பட்ட முறை, அரிசி சற்று கறுப்பாயிருந்தாலும் நல்ல பலனைக் கொடுக்கும்.)

இந்த அரிசியை தேர்ச்சி பெற்ற ரசாயன நிபுணர் பரிசோதனை செய்து பொது மக்களுக்கு வழங்குவதற்குத் தகுதியுள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இவ்வரிசி வழங்கப்படுகிறதெனினும், புழுங்கலரிசி வந்து சேர்ந்தவுடன் அது (புழுங்கலரிசி) வழங்கப்படும்.

எம். எப். டி. காஸ்பேர்ஸ்,
உணவு கமிஷனர் (கட்டுப்பாடும் விநியோகமும்.)
கொழும்பு 7,
21, ஜூலை, 1952.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காந்திஜீயின் கடிதங்கள் வேண்டும்

## மக்கள் சபைத்தலைவர் மாவ்லங்கர் வேண்டுகோள்

"மகாத்மா காந்தி ஒழுங்காகவும் நன்றாகவும் கடிதங்கள் எழுதினவர். அவரது வாழ்நாளில் ஆயிரக்கணக்கான கடிதங்களுக்கு தன் கைப்பட பதில் எழுதியிருக்கிறார். அவர் சம்பந்தப்பட்ட கடிதங்கள், கட்டுரைகள் முதலியவற்றை சேகரித்துப் பாதுகாத்து வைப்பது "காந்தி தேசியஞாபகார்த்த சபை"யின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்."

என்று மேற்படி சபைத் தலைவரும், டில்லி மக்கள் சபைத் தலைவருமாகிய திரு ஜி. வி. மாவ்லங்கா அயல் நாடுகளில் காந்திஜியுடன் கடிதத் தொடர்புகொண்டிருந்தவர்களுக்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறுகிறார். மேலும் அவர் எழுதுவதாவது:—

"இந்தியாவில் காந்திஜியின் கடிதங்களும் தஸ்தாவேஜுகளும் ஏராளமாகச் சேகரிக்கப்பட்டு படமெடுக்கப்பட்டுள்ளன. அயல்நாடுகளில் காந்திஜியிடமிருந்து கடிதங்கள் பெற்றவர்கள் அவற்றை எங்களுக்கு அனுப்பி வைத்து உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

விலாசம்: காரியதரிசி, காந்தி தேசிய ஞாபகார்த்த சபை, 5, மான்சிங் ரோட், புதிய டில்லி (இந்தியா)

எங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களைப் படமெடுத்துக்கொண்டு அவைகள் பத்தரமாகத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்."

---

### தாழ்த்தப்பட்டவர் படுகொலை

இராமநாதபுரம் மாவட்டம் ஷெடியூல்ட் வகுப்பார் சம்மேளனம இலங்கை கிளையின் பொதுச் செயலாளர் திரு ஆர். எஸ் பொன்னப்பலம் பின்வருமாறு எழுதுகிறார்:—

எமது தாயகமான மேற்படி மாவட்டத்தில் கல்லல் என்ற ஊரை அடுத்துள்ள பொரணடி கிராமத்து செல்லையா சேர்வையின் பண்ணையில் பணியாளர் வேலை பார்த்து வந்த பி சுப்ரமணியம் என்ற ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தவரை கொலை செய்து அன்னவரது பிரேதத்தை எவர் கண்ணிலும் படாமல் மறைத்துவிட்டதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது

இக்கொலைக்கு முக்கிய காரணம் ஒரு ஜாதி இந்துப் பெண்ணுடன் திரு சுரமணியம் காதல்கொண்டிருந்ததாகவும் இக்காதல் விவகாரம கிராமத்திலுள்ள ஜாதி இந்துக்களுக்கு தெரிய வரவே அவர்கள் திரு சுப்ரமணியத்தை கொலைசெய்துவிட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக சென்னை சர்க்காரை கவனிக்கும்படி இலங்கையிலுள்ள இந்திய ஹை கமிஷனரை எமது சம்மேளனம கேட்டுக்கொண்டிருப்பதோடு தங்கள் ஆவசியமான எல்லா நடவடிக்கைகளும எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

### மல்லிகா'

கடந்த வாரம் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் தலைமையில் 'மல்லிகா' என்னும் தமிழ் நாடகம் தமிழர் முன்னேற்றக் கழக நிதிக்காக நடத்தப்பட்டது தலைவர் தமது தலைமைப் பேருரையில தமிழர் முன்னேற்றம், கவர்ச்சி நட்பு என்பன பற்றியும் நாடகத்தை நடத்தியவர்களின் ஆர்வத்தையும் உழைப்பையும் பாராட்டிப் பேசினர்

### ஜைன மத குரு காலமானர்

பிரசித்திபெற்ற ஜைன மத குருவான ஆசார்ய ஸ்ரீ சூரியசாகர்ஜீ மஹராஜ் இங்கு காலமானர்.


சென்னை மாஜி மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது 'பாரததேவி'

நீங்கள் சிங்களம் படிக்க விருப்புகிறீர்களா?

ஆம்!

—எனில்—

தமிழ் சிங்கள சமசொற்கள்

දෙමල සිංහල සමවචන

—படியுங்கள்—

ஆக்கியோன்

"சம்பாஷணைச் சிங்களம்" (இதன் விலை ரூ 1/50) இயற்றியவர்; ஸ்கந்தவரோதயகல்லூரி தமிழ் சிங்கள ஆசிரியர் சுவாமி குணரத்தன அவர்கள்

இந்நூல் சகல தமிழ், சிங்கள பத்திரிகைகளால் வரவேற்கப்பெற்றதும், பாண்டித்தியமுள்ள பல மேதாவிகளால் நன்கு புகழப்பெற்றதுமாய் விளங்குவதால் உங்களுக்கும் பெரும் பயனை அளிக்கும் என்பது முற்றிலும் உண்மை

எல்லா முதல்தர வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விலை ரூபா 1-00 தபால் செலவு சதம் 30.

விநியோகஸ்தர்கள்:

லீலா ஸ்டோர்ஸ்,

249 நொறிஸ் றோட், கொழும்பு.

தந்தி: KANKAYAN" போன்; 5924



பெண்களுக்கோர் அற்புத சஞ்சீவி

கர்ப்பக்கோள் நிவாரணி

சூதகம் (மாதவிடாய் ஏற்படும் காலங்களில் உண்டாகும் வயிற்று வலி) வாய்வு, கற்பப்பூச்சி, தலைவலி மயக்கம், ஏப்பம், சோம்பல், களைப்பு இவைகளுக்கு உத்தரவாதம்பெற்ற ஓர் அருமையான நிவாரணி

புட்டி விலை 7-75.

வலியங்காடி லேகியம்

இதன் குணம் வாதம், திமிர்வாதம், முடக்குவாதம், பிள்ளைவாதம், சூலை, குன்மம், அந்தரவாய்வு, வெதர் நரப்பு வீக்கம், சூலை வீக்கம், சூலை வாய்வு, வயிற்றுப் பொருமல், காக்கை வலி இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கும்.

விலை ரூபா 8-50

சென்ற் மேரி நேத்திர குமரித் தைலம்

இது அநேக குணங்களுள்ள தைலம். பித்தம், பித்த கிறுகிறுப்பு, உஷ்ணம், சோபை. பைத்தியம், மயக்கம் இவைகளை நீக்கி மயிர்களை நன்றாய் வளரச் செய்யும். கறுப்பாக்குகிறது. நரைதிரைகள் உண்டாகாதபடி தடுக்கிறது. விசேஷ மூலிகைகளின் சத்துள்ள தைலம் இதுவே.

சி. புட்டி விலை ரூ2-00 பெரியது 4 ரூபா

பாரத பஸ்பம்

தீராத ஆஸ்தமா சம்பந்தமான இருமல், சளி, தடுமல், காசம், இளைப்பு முதலிய வியாதிகளுக்கு ஓர் அருமையான பக்குவத்துடன இந்தியாவில் தயாரிக்கப்பட்டு வரும மருந்து.

முதல்தரமான பஞ்சாட் குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:

சென்ற் மேரி வைத்தியசாலை,

201, செட்டியார் தெரு, கொழும்பு

தலைமைக் காரியாலயம்,
ஆயுர் டாக்டர் S. S. பெர்ணண்டோ,
இடிந்தகரை.



ரெஜிஸ்ரேட் நமபர் 13207.

இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கமலா பப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை பாவித்துப் பாருங்கள்!




உணவே மனிதனுக்கு ஊக்கம் உண்டாக்குவது!!

அந்த உணவை ருசிப் படுத்துவது

கமலா பப்படம

முதல்ரக உழுந்தால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது மணம், குணம், ருசியுள்ளது.

மொத்த வியாபாரிகளுக்கு சலுகை உண்டு

Proprietor: பி. எம். ஹமீது;

197, கெய்ஸர் வீதி, கொழும்பு




இரும்பு பணப் பெட்டிகள்

லண்டன் நகர ஜோன்டான் லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை

1795-ம் ஆண்டில் ஸ்தாபகம் - மிகப் பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன் டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை.



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன் டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை.

டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.

ஆபீஸ் பொருட்கள் விற்பனைப் பகுதி

18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை, கொழும்பு.

போன்: 2301.


வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சுவைத்த பழம்

"ஏ! கூடையை இங்கே, கொண்டுவா" பார்வதியம்மாள் பழக்காரனைக் கூப்பிட்டாள். கூடைக்காரன் கூடையை இறக்கி இரண்டு பழங்களை நீட்டினான்

"இந்தாங்க அம்மா நல்ல சாதித் தக்காளிப் பழம்"

"சீ! இது கிளி கொத்தியது. வேறொன்றை எடு" பழத்தைப் பார்த்துவிட்டுப் பார்வதியம்மாள் கூறினாள். வேறு இரண்டை வாங்கிக் கொண்டு அவனை அனுப்பினாள். அவனும் கிளி கொத்திய பழங்களை கூடையினடியிற் போட்டுவிட்டு தூக்கிச் சென்றான் கூடையை

எசமானியம்மாளுக்கும் கூடைக்காரனுக்குமிடையில் நிகழ்ந்த சம்பாஷணைகளைக்கேட்ட வள்ளியின் உள்ளத்திலிருந்து நீண்ட பெருமூச்சொன்று வெளியேறியது. ஆம். அவள் கண்முன் கடந்தகாலச் சம்பவங்கள் படமாக ஓடின.

* * *

பறையன்பட்டிக் கிராமத்தில் கைம் பெண்ணான வள்ளி வசித்துவந்தாள் அவளுக்குப் புள்ளிமான் போல ஒரு பெண் இருந்தாள். பொன்னி அவள் செல்ல மகள். "குது குது" என்று மயிர் மாணிக்கச் செடிபோல வளர்ந்திருந்தாள் பொன்னி. வள்ளி உயர்ந்த சாதியார், வீடுகளில் வேலைசெய்தாலும் பொன்னியை நன்றாக வளர்த்துவந்தாள் அந்த மாம்பழத்தைக்கொத்தித்தின்ன கிளிகளெல்லாம் பறந்தோடிவரும்பொழுது வள்ளி "கவண்" வீசிக் கலைத்துவிடுவாள.

அன்றொரு வெள்ளிக்கிழமை. வள்ளி சந்தைக்குச் சென்றிருந்தாள். சாமான்களுடன், மகளுக்கு இனிப்புச் சாமான்களும் வாங்கிக் கொண்டு திரும்பினாள்.

"பிள்ளை பொன்னு..." அன்பு ததும்ப அழைத்துக் கொண்டே உள்ளே வந்தாள். தோட்டக்காரனைக் கண்ட கிளி ஒன்று கொத்திய மாம்பழத்தைக் குறையில் விட்டுவிட்டுச் சிறகடித்துப் பறந்தது.

கட்டிக் காத்த பழம் கொத்தப்பட்டதைக் கண்ட கமக்காரன் மனம் என்ன பாடு படுமோ அதைப்போல் வள்ளியின் உள்ளமும் துடித்தது. அவள் தலை "கிர்"ரென்று சுழன்றது!

* * *

இரண்டு மாதங்களுருண்டன. வள்ளியும் ஏகத்தால் உருண்டுகொண்டிருந்தாள். கன்னியான பொன்னி தலையிற் தண்ணீர் வார்க்காமல் விட்டு மாதங்கள் இரண்டாகிவிட்டதைக் கண்ட வள்ளியின் திகில் முகில்வரை சென்றது! விஷயம் காட்டுத் தீபோல் அந்த ஊர் முழுதும் பரவியது. எங்கும் [illegible]தே பேச்சு! வள்ளியின் காதிலேயும் சில விழுந்தன.

"ஏன் அண்ணே! நம்ப பொன்னி இரண்டு மாதம் கர்ப்பமாமே"

"ஆமாம்! அவள்களின் பரம்பரைத்தொழில்தானே அது?"

சின்னவனும் கந்தனும் கதைத்துக்கொண்டது இது.

"ஏனடி வள்ளியின்ரை பொன்னி தலையிலே தண்ணி வார்க்கலையாம்! நாலு மாதமாமடி! அவளின் கண்களை ஆரைத்தான் மயக்காது"

"போடி பிள்ளை! அவள்களின் குடும்பமே சரியான ஆட்டக்காரிகள் தானே"

லட்சுமி—சின்னாச்சி என் போரின் கிணற்றுப் பேச்சு இது.

"எடே! அந்தப் புள்ளிமான் பொன்னியை யாரோ கண்ணி வச்சுட்டானாம்! வயத்திலே க்ன்று கூட இருக்காமடா! .........நான் கூட அதை என் வலையிலே போடப் பார்த்தேன் எவனோ முந்திட்டான்!"

"ஆமாம்டா! சோக்கான குட்டியெடா"

இது வேலையின்றி வம்பளந்து கொண்டிருக்கும் வாலிபக்கூட்டத்தின் உரையாடல்!

ஊர் வாயில் உருண்ட பேச்சுகக்கள் வள்ளியைக் கொல்லாமற் கொன்றன.

---

கலாமதி

---

எல்லாவற்றையும்விட அந்த இரண்டு வசனங்கள்தான் அவளுடைய காதுகளில் நாராசம் வார்த்ததுபோலிருந்தன.

"ஆமாம்! அவள்களின் பரம்பரைத்தொழில்தானே அது"

"போடி பிள்ளை! அவள்களின் குடும்பமே சரியான ஆட்டக்காரிகள் தானே!"

இவ்விரண்டு வசனங்களும் அவள் காதைத் துளைத்துக் கொண்டிருந்தன. அவள் நெஞ்சங்குமுறியது.

* * *

மகள்தான் ஏதோ சிறுபிள்ளைத்தனத்தால்—அல்லது—பருவக் கோளாறால் அப்படி நடந்துவிட்டாள்: அதற்காக ஒரு குடும்பத்தையேன் சந்திக்கிழுப்பானேன்? பரம்பரைத தொழிலென்று கூறினார்களே! அவள்—வள்ளி—என்ன அப்படிக் கெட்டுப்போனவள்? அவள் தகப்பன் அவள் காதல் கொண்ட முருகனை மணக்க வேண்டாமென்றார். அவன் அவளது சாதியான்—அவள் மாமன் மகன்—சின்ன வயதிலேயே அவள் அவனுக்கு அவன் அவளுக்கு என்று வாழ்ந்தனர். ஆனால்......... அன்பெனும் அரும்பு வளரவளர காதலென்னும் மலராக மாறியது. அதை அவள் தகப்பனறிந்திருந்தும்—சில குடும்பச் சண்டைகளால்—அவள் அவனை மணக்கப்படாதென்றா[illegible]

அதன் பலன்? அவள் தகப்பன் வீட்டிலிருந்து முருகன் வீட்டுக்கு வந்தாள். அதனால் அவள் 'ஓடிப் போனவளா?' கருத்துக் கிசைந்த கணவனுடன் வாழ விரும்பி வீட்டை விட்டுவந்தால் அவள் "ஆட்டக்காரி"யா? செய்யக் கூடாத செயல் என்னத்தை அவள் செய்தாள்? காதலனுடன் கூடி வாழ விரும்பியவள் கற்பிழந்தவளாகத்தென்பட்டாள் குருட்டுச் சமுதாயத்திற்கு!

கண்கெட்ட சமுதாயம் காதல்—கற்பிழப்பு என்பதற்கு வித்தியாசந் தெரியாமல் வீணே அலறுகிறதே!

* * *

"ஆமாம் அவள்களின் பரம்பரைத்தொழில்தானே அது"

சின்னவன் கணபதிக்குச் சொன்ன பதிலைக் கேட்ட அவள் அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் தத்தளித்தாள் ஏன்? அவன் காமாந்தக்காரன். கற்பழிப்பவன்—கயவன். இது அவள் கூறியதல்ல. சமுதாயம் அழைத்ததல்ல சட்டத்தின்படி நிரூபிக்கப்பட்டவன். நீதிமன்றத்திலே தண்டிக்கப்பட்டவன். தன் முதலாளியின் மனைவியைக் கற்பழித்த குற்றத்திற்காகச் சிறை சென்றவன். அதை அவன் மறந்துவிட்டான். ஆனால் "பரம்பரைத தொழில்" பற்றிக் கதையளக்கிறான்.

* * *

மேலும் மாதங்கள் சில உருண்டன. அவமானத்தாலும் அச்சத்தாலும் வள்ளி ஏங்கினாள். உடன் பிறந்த தமையன் வீட்டுக்குச் சென்றாள். "மானம் கெட்ட பெண்ணை மகனுக்கு வேண்டாமெ"ன்று சீறி விழுந்தான் அவன். எதிர்த்துப் பேச முடியவில்லை அவளால். சாந்தியை விரும்பித் தமையன் வீடு சென்ற தங்கை சஞ்சலத்துடன் திரும்பினாள். கிளி கொத்திய பழத்தை ஒரு காகங்கூடப் புசிக்க முன் வரவில்லை! மாதங்கள் ஐந்து பொன்னியின் நிலையைக் கண்டு வள்ளி ஏக்கங்கொண்டாள். சமுதாயத்தினது அம்புகளும் சகோதரனது ஈட்டியும் அவளுள்ளத்தைத் துளைத்தது. அதிலே பளிச்சிட்டது ஒரு யோசனை! "ஆம்! நாட்டின் எதிர்காலப் பிரஜையொன்று "தகப்பனற்றது" என்ற பெயரை ஏன் பெற வேண்டும்? தனது மகள் கற்பிழந்தவள் என்பதை உலகத்துக்கு—என்றும்—சந்ததியுள்ளளவும் நிரூபிக்கும் அடையாளச் சின்னம் தானே குழந்தை. ஆம். அந்தச் சின்னம் முற்றாக உருவாக்கப்படு முன்பே இழிக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டால்.......? அதனுடு அந்த வசையாழியும். காலச் சக்கரஞ் சுழதுபோய்விடும். சமுதாயம் மறந்துவிடும்" ஆம். இந்த யோசனை அருமையாகப் பட்டது அவளுக்கு. வள்ளி இரகசியமான ஏற்ற வைத்தியத்தைச் செய்தாள்!

ஒரு நாள் இரவு நல்ல பின்னிருட்டு. வள்ளி அவசர அவசரமாய்த் தோட்டத்து எலுமிச்சையின் கீழ் குழி பறித்தாள். எதையோ போட்டு மூடினாள் இப்பொழுது அவள் முகத்தில் ஓரளவு சந்தோஷ ரேகைகள் படர்ந்தன நெஞ்சிலே சிறு அமைதி.

* * *

நாட்கள் சிறகு கட்டிப் பறந்தன. வள்ளியின் ஏக்கம் நெஞ்சத்திலிருந்து ஓரளவு இறங்கிவிட்டதால் அவளுள்ளத்திலேயும் ஏதோ ஒரு துணிவு! கிராமத்திலேயுலாவ வெட்கப் பட்டிருந்த வள்ளி தலை காட்டத் தொடங்கிவிட்டாள். வேற்றிடங்களுக்குத் தொழிலுக்கும்போகத் தொடங்கிவிட்டாள். சமூகமும் இப்பொழுது பொன்னியைப் பற்றிக் கதைப்பதில்லை. ஏன்? அவர்களுக்குத்தான் வேறு விடயம்—நாகனின் மகள் வீட்டை விட்டு ஓடிப்போனது பற்றிக் கதைக்கவே பொழுது காணாமலிருக்கிறது. பொன்னியின் விடயம் பழையதாகிவிட்டது! அதையிட்டு அவளுக்கு ஓரளவு ஆறுதல்.........! இருந்தாலும் மகள் "சுவைக்கப்பட்ட பழந்தா"னே?

* * *

"ஏ வள்ளி! என்ன யோசனை இந்தா இந்த மிளகாயை இடி" பார்வதியம்மாளின் இந்தக் குரல் வள்ளியின் சிந்தனையை மேலும் தொடரவிடாமல துண்டித்தது மீண்டுமொரு பெருமூச்சுடன் வள்ளி எழுந்தாள்.

(யாவும் கற்பனையே)

---

## 'ஆசியாவின் மன்னர் நேருஜி'

அலெக்ஸாண்ட்ரியா—"ஆசியாவின் மன்னர்" என்று நேருஜியை எகிப்திய ஸ்தானிகர் கேமல்-பே போற்றிப் புகழ்கிறார். "உலக அரங்கில் ஆசியாவின் கருத்தைப் பிறர் மதிக்கச் செய்யும் கொள்கைகளை நேரு அனுஷ்டிக்கிறார். ஆசியா உணர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன அவரது கொள்கைகள்" என்று ஸ்தானிகர் கூறுகிறார்.

---

## நோயாளியின் காதல் நால்வர் மரணத்துடன் முடிவு

நியூயார்க்—

ஒரு வைத்திய நிலையத்தில் சுகிச்சை பெற்று வந்த விமான இலாகா அதிகாரிக்கு அங்கிருந்த காரல் என்ற நர்ஸ்மீது அடங்காத காதல் ஏற்பட்டுவிட்டது அவருடைய தொந்தரவுகளைத் தடுக்க இரு காவலாளிகள் முயன்றனர் உடனே காரலையும் காவலாளிகளையும் அந்த அதிகாரி சுட்டுக் கொன்றுவிட்டு தம் உயிரையும் மாய்த்துக் கொண்டார்.



## தமிழ் சிங்கள சம சொற்கள்

ஆசிரியர்: சுவாமி குணரத்ன, பிரசுரித்தவர் திரு எஸ். ரி. சின்னத்துரை, கிடைக்குமிடம்: லீலா ஸ்டோர்ஸ், 249 நோறிஸ் றோட், கொழும்பு—11. விலை: ரூ. 1-00

இலங்கையின் சரித்திரம் சிங்களவர் ஆட்சிக்காலம் தமிழர் ஆட்சிக்காலம் என்று பின்னப்பட்டு வந்திருக்கிறது. இதன் காரணமாக பழம் பெரும் பாஷையான தமிழ்ப் பாஷையிலிருந்து பல்லாயிரக்கணக்கான சொற்கள் சிங்கள இலக்கியத்துள்ளும் கிராமியப் பேச்சினுள்ளும் இரண்டறக் கலந்து இன்று அப்பாஷையையும் வளம் பெறச் செய்திருக்கின்றன. இத்தகைய கலப்பு பொலனருவைக் காலத்துக்கு முன்பே ஆரம்பித்து கண்டியரசர் காலத்துச்குப் பின் இன்றுவரை நாளிலும் பொழுதிலும் நடைபெற்று வருகிறது.

இந்நூலிலுள்ள அநேக சொற்கள் ஓசையிற் போலவே அர்த்தத்திலும் தமிழ் சிங்களம் என்னும் இரு பாஷைகளுக்கும் சமமுடையனவாய்க் காணப்படுகின்றன. இந்நூலை ஆராய்ச்சிக் கண்ணோடு படிக்கும் ஒருவர் தெலுங்கு, கன்னடம் துளுவம், மலையாளம் ஆகிய கிளைமொழிகளுக்குத் தமிழ் மொழி எப்படி முதன் மொழியாகுமோ அப்படி சிங்களத்திற்கும் தமிழ் எவ்வளவு தூரம் உறவு மொழியாகும் என்பதை உணரக்கூடும்.

இந்நாட்டின் தேசிய மொழி தமிழா சிங்களமா அல்லது இரண்டுமா என்ற பிரச்னை மும்முரமாகக் கிளப்பப்பட்டிருக்கும் இக்காலையில் சிங்களத்தையும் தமிழையும் ஒருங்குபடுத்தும் நூல்களை அவ்வப்போது வெளியிடுவதன் மூலம் திரு எஸ் ரி. சின்னத்துரை அவர்கள் நாட்டிற்கு ஒரு அரிய தொண்டை ஆற்றுகிறார் என்றே சொல்ல வேண்டும்.

இத்துறையில் அவருடைய முதல் பதிப்பான "சம்பாஷணைச் சிங்களம்" யாழ்ப்பாணப் பகுதிகளில் அனேக பாடசாலைகளில் பாடப் புத்தகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம். இதே போல "சம்பாஷணைத் தமிழை"யும் எழுதுவித்து சிங்களப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் பாடப் புத்தகமாக நியமிக்கும்படி செய்வாரேயானால் தமிழர் சிங்களர் மாற்றுப் பாஷைகள்மூலம் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் அறிந்துகொள்வதற்கு வித்திட்ட மகத்தான பெருமை திரு சின்னத்துரை அவர்களைச் சாரும் என்று கருதுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ இலங்கை-இந்திய காங்கிரஸின் இரண்டாவது மகஜர்

## பிரதானகஷ்டங்களைப்பிரதமர் நீக்குவாரா?

இலங்கை இந்தியர் காங்கிரஸ் பிரதம மந்திரிக்கு மீண்டும் ஒரு மகஜர் சமர்ப்பித்திருக்கிறது. பிரஜாவுரிமை மனுக்களைப் பைசல் செய்வதிலுள்ள இரு கஷ்டங்கள் எளிதாக்கப்பட்டிருப்பதையும், மனுக்கள் பரிசீலனையைத் துரிதப்படுத்துவதையும் காங்கிரஸ் செயல் கமிட்டி வரவேற்கிறது. மனுதார்கள் பதிவுக் கமிஷனரைத் திருப்திப்படுத்துவதிலுள்ள ஏனைய கஷ்டங்களையும் நீக்கும்படி காங்கிரஸ் தம் மகஜரில் பிரதமரைக் கேட்டுக்கொள்கிறது. செயல் கமிட்டியின் சார்பாக திரு கே. ராஜலிங்கம் மகஜரில் கையெழுத்திட்டிருக்கிறார்

(1) மனுதார் ஒரு இந்தியர் என்பதை நிரூபிக்க வேண்டும் இது சுலபமன்று. மனுதார் இலங்கையில் பிறந்தவரானால் அவர் இந்தியர் என்று நிரூபித்தல் மிகச் சங்கடமாகிவிடும். இக்காரணத்தை முன்னிட்டு இதுவரை ஏராளமான மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

(2) மனுதாரின் மனைவி மக்கள் சாதாரணமாக அவருடன் வசிக்கிறார்களென்பதை அவர் நிரூபித்தாக வேண்டும். இதை நிரூபிக்க தஸ்தாவேஜுகள் கிடைப்பது சாத்தியமல்ல.

(3) கடந்த 15 வருடங்களில் மனுதார் பன்முறை இந்தியாவுக்குப் போய் வந்திருக்கிறாரென்பதற்காக ஏராளமான மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அவசர காரணங்களை முன்னிட்டு இந்தியாவுக்குப் போய் வருவதால், மனுதார் இலங்கையில் நிரந்தரமான அக்கறையில்லாதவர் என்று கூறுவது தவறு

(4) முன்பு தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்குப் பணம் அனுப்ப வேண்டுமானால் தாங்கள் "தற்கால வாசிகள்" என்று ஒரு பத்திரத்தை கையெழுத்திட வேண்டிய நிர்ப்பந்தமிருந்தது. அதைக் காரணமாகக் காட்டி இப்பொழுது ஏராளமான மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன. இந்தப் பத்திரம் பிரஜாவுரிமை மனுக்களைப் பாதிக்காது என்று நாணயச் செலாவணி கட்டுப்பாடு அதிகாரி ஏற்கனவே கூறியிருக்கிறார்.

(5) மனுதாருக்கு இந்தியாவில் ஏதாவது சொத்துகள் இருக்கிறதாகத் தெரிந்தால் மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன. இது அநியாயம். மனுதாருக்கு பிதுரார்ஜித சொத்துகள் ஏதேனும் இந்தியாவில் இருக்கும் காரணத்தால், அவர் நிரந்தரமாக இலங்கையில் வசிக்கவில்லையென்று எப்படிச் சொல்ல முடியும்?

(6) அரசாங்க அலுவல்களை முன்னிட்டும் ராணுவ சேவைக்காகவும் அயல்நாடு சென்றிருந்தவர்களுக்கு சட்டத்தில் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி கலவி கற்பதற்காகவும் சுகாதார காரணங்களை முன்னிட்டும் வெளிநாடு சென்றவர்களுக்கும் அச்சலுகை அளிக்கப்படுவது தானே நியாயம்?

(7) மைனர் பிள்ளைகள் பெற்றோர்களின் பராமரிப்பில் இல்லையென்ற காரணத்தால் சிலருக்குப் பிரஜாவுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. இது தவறாகும். வறுமையின் காரணமாக குழந்தைகளும் தோட்டத்தில் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது

(8) சட்டப்படி மனுதார் வாழ்க்கை வசதி உடையவராக இருக்க வேண்டும் தோட்டத் தொழிலாளர் திடீர் திடீரென வேலையிழந்து போவதுண்டு. ஆகவே அவருக்கு ஜீவனோபாயத்திற்கு வழியில்லை என்று மனு நிராகரிக்கப்படுவது அநியாயம். ஏனெனில் அவருக்கு மறுபடியும் மற்றொரு தோட்டத்தில் வேலை கிடைத்துவிடுகிறது.

(9) பிரஜாவுரிமை மனுக்களில் பல ரகங்களுண்டு ரகம் மாறி மனுச் செய்திருந்தால், அந்த மனு நிராகரிக்கப்படுகிறது. இது நியாயமன்று. தவறைத் திருத்த மனுதார்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

(10) சாட்சிகள் கையெழுத்திடாததாலும் சத்தியக் கடுதாசி அனுப்பப்படாததாலும் மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன. இந்தக் குறைகளையும் நீக்க மனுதாருக்கு அவகாசமளிக்க வேண்டும்.

(11) காலம்சென்ற மனைவியின் அல்லது கணவனின் மரண "சர்டிபிகேட்" கொடுக்கத் தவறினால் மனு நிராகரிக்கப்படுகிறது. இச் "சர்டிபிகேட்" வேண்டுமென்று வற்புறுத்துவது நியாயமல்ல

(12) மனுதார் அடிக்கடி தோட்டம் மாறுவதால் கமிஷனரின் 'நோட்டீஸ்' அவருக்குக் கிடைப்பதில்லை இதைக் காரணமாகக் கொண்டு மனு நிராகரிக்கப்படுகிறது. 'நோட்டீஸ்' மனுதார் பெற்றுக்கொள்ளும்வரை மனுவை நிராகரிக்கக்கூடாது

(13) தஸ்தாவேஜுரூபமாக வாசகால யோக்கியதாம்சத்தை நிரூபிப்பது சாத்தியமல்ல. அடிக்கடி தோட்டங்கள் கைமாறுவதால், தோட்டத் தஸ்தாவேஜுகளும் மறைந்துவிடுகின்றன. இந்த விதி திருத்தப்படாவிட்டால் நியாயம் வழங்கியதாகமாட்டாது

மேற்கண்ட கஷ்டங்களையெல்லாம் நீக்கும்படி கேட்டுக்கொள்ளும் பிரஸ்தாப மகஜர் இதுவரை நிராகரிக்கப்பட்ட மனுக்களை மறுபடியும் பரிசீலிக்கும்படி கடைசியாகப் பிரதமரைக் கேட்டுக்கொள்கிறது.

## சங்கடமான.........

[6-ம் பக்கத் தொடர்ச்சி]
போல இலங்கையில் பிறந்த அனைவருக்கும் பிரஜாவுரிமை கிடைக்கக் கூடியதாக சட்டத்தைத் திருத்தல்

(3) இலங்கையில் பிறக்காதவர்கள் குறிப்பிட்ட காலம் (5 வருடம்) இலங்கையில் வசித்திருந்தால், அவர்களுக்கு பிரஜாவுரிமை கிடைக்கக் கூடியதாக விதிகள் சேர்த்தல்

(4) இந்தியாவிலிருந்து மேலும் அநேகர் இலங்கையில் வந்து குடியேறுவதைத் தடை செய்ய தற்போதைய குடியேற்றச்சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்துதல்.

(5) ஒரு சிலர்கூட சட்ட விரோதமாகக் குடியேறுவதை கடுமையாகத் தடை செய்தல்.

அரை குறை படிப்புள்ளவர்களும், படிப்பு வாசனையே அறியாதவர்களும் கூட பயனடையக் கூடியதாக சட்டமும் முறைகளும் எளிதாக்கப்படவேண்டும்.

இத்தகைய வழிகளில் இப்பிரசனையைத் தீர்க்கலாம். சமீபத்தில் இலங்கை—இந்தியர் காங்கிரஸ் பிரதமருக்குச் சமர்ப்பித்த மகஜரில் கண்ட கோரிக்கைகளைதான் நாங்களும் ஆதரிக்கின்றோம். எங்களில் யாரும் அந்த ஸ்தாபனத்தில் அங்கத்தினராயில்லை. அவர்களுடைய உருப்படியான திட்டங்கள் இலங்கை மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு வழிகாட்டுகிறதென்று நாங்கள் உணருகின்றோம்.

### அபாயம் தெரிகிறது

எதுவித கட்டுப்பாடுமில்லாமல், ஏராளமான இந்தியர்களை நுழைய அனுமதிப்பதால் இலங்கைப் பொருளாதார நிலைமை பாதிக்கப்படும் என்பதை நாங்களும் அறிகின்றோம். அரசாங்க குடியேற்றச் சட்டத்தை நாங்களும் ஆதரிக்கின்றோம்

இதுவரை இந்தியர்களும் அவர்களது கோரிக்கைகளும் நியாய பூர்வமான நேர்மையான வழியில் நடத்தப்படவில்லை என்பது எங்களின் அபிப்பிராயம். இலங்கையைத் தாயகமாகக் கொண்டவர்கள் அனைவரையும் இலங்கைப் பிரஜைகளாக அங்கீகரிக்க வேண்டுமென்பது தான் நாங்கள் கேட்பதெல்லாம்.


அவள் எப்பொழுதும் விரும்புவது
மிக்காடோவின்

★ சோப்
பௌடர்
★ வாசனைச் சாமான்கள்

அவைகளின் இனிய நறுமணமே காரணம்!

**மிக்காடோ அன் கோ.**
டாம் வீதி, கொழும்பு
போன்: 3242



**மூல வியாதியால் கஷ்டப்படும் அன்பர்களுக்கு!**

**ஜெர்மனிய டாக்டர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஹோமியோபதி வைத்தியமுறை நிரந்தர நிவாரணமளிக்கிறது**

உள்மூலம், வெளிமூலம் சீழ்மூலம், இரத்தமூலம் மூலத்தில்குத்து,வலி, கடுப்பு, காந்தல், அரிப்பு, சதா, நீர் ஒழுகுதல், மூலம் வெளிவருதல், மூலமுளை,பவுத்திர சிரங்கு முதலிடன உடனே குணமாகும்.

காசம், ஈளை, இளைப்பு மந்தாரகாசம், சுவாச கோளங்களின் ஏற்படும் கோழை நிறைந்த காசம், வாய்வுத் தொந்தரவால் ஏற்படும் காசம், சூதக கோளாறினால் பெண்களுக்கு ஏற்படும் காசம், பரம்பரையாக உண்டாகும் நரம்பு சம்பந்தமான காசங்கள் ஆக சகல விதமான காச ரோகங்களுக்கும் ஹோமியோபதி வைத்திய முறை நிரந்தர நிவாரணமளிக்கிறது.

**S. D. மதுரநாயகம் வைத்தியசாலை**
211 செட்டியார் தெரு, கொழும்பு.



**மூல வியாதிக்கு**

**கருணைக்கிழங்கு லேகியம்**

எல்லாவித மூலம், பவுத்திரம், வியாதிகளையும் சத்திர சிகிச்சையின்றி சுலபமாகவும் நிரந்தரமாகவும், நிச்சயமாகவும் குணப்படுத்தக்கூடிய அரிய சஞ்சீவி. ஆயிரக்கணக்கான நோயாளர்கள் குணமடைந்துள்ளனர். மூல முளைகள், ரத்தம் சீழ்வடிதல், பவுத்திரம், கட்டி, நீர்க்கசிவு, குடலிரைச்சல், மலபந்தம் தேககாங்கை யாவும் அறவே ஒழிந்துவிடும். உத்தரவாதமான மருந்து. பழனி தண்டபாணி வைத்தியசாலையின் பிரசித்திபெற்ற தயாரிப்பு.

**24 நாள் டின் 1-க்கு ரூ. 7-50**
**மூலமுளைக்களிம்பு புட்டி 1க்கு ரூ. 1-00**

**நெல்லிக்காய் லேகியம்**

(VITAMIN சத்துக்கள் நிறைந்தது)

உடல் மெலிந்தவர்களுக்கும் பலவீனப்பட்டவர்களுக்கும் பிரசித்தமான மருந்து. இருமல், சுவாசகாசம், குடல், எலும்புகள் வலுப்படும் பசி, ஜீரண சக்தி உண்டாகும் இருமல், க்ஷயம், பாண்டு, சோகை, மூல வியாதிகளுக்கும் உதவியான மருந்து.

**20 ரூபா எடை விலை ரூ. 4-8-0**

**இராஜவீரிய லேகியம்**

தீங்கற்ற தாதுபுஷ்டி மருந்து. ஜீவாதாரக் கருவிகளைப் போஷித்து சரீர புஷ்டியும், நரம்புகளுக்கு வலுவும், இல்வாழ்க்கையில் இன்பமும் உண்டாக்கும். ருசியுள்ள மருந்து.

**20 ரூபா எடை விலை ரூ. 4-8-0**

பார்சல் செலவு சேர்த்து M. O. அனுப்பவும்.

**கேட்லாக் இனம்.**

**தண்டபாணி வைத்யசாலை**
பெரியகடைவீதி, பழனி (S. I.)
Thandapani Medical Hall PALANI (S. I.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலோன் என்ரரெயின் மென்ஸ் லிமிட்ரெட் ஸ்தாபனத்தார் பெருமகிழ்ச்சியுடன் திரையிடும் காதல் சித்திரம்!



# செண்ட்ரல் [கொழும்பு]

ஞாயிறுக் காட்சிகள் காலை 10-மணி பிற்பகல் 2-30, 6 மணி 9-30 மணிக்கு மற்றைய நாட்களில்: வழமைபோல 6-மணிக்கும் இரவு 9-30 மணிக்கும்.



## மகேந்திரா
(யாழ்ப்பாணம்)

இன்று காலை 10-15 மணிக்கும் மாலை 6-15, 9-30 மணிக்கும்

## ஜோதி
(திரிகோணமலை)

இன்று பகல் 2-30, மாலை 6-15, 9-30 மணிக்கும்

★ காதல் தனி மனிதனின் ஏகபோக உரிமையல்ல.

★ ஏழையின் காதலில் ஏமாற்றம் ஆனால் அரசனின் காதல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.


★ வெள்ளித்திரையின் மிகப்பெரிய காதலர்கள் ஒன்றுகூடி நடிக்கும் உணர்ச்சியூட்டும் உன்னத நடிப்பின்மூலம் கனவிலும் நனவிலும மறக்கமுடியாது சுடர்விட்டுப் பிரகாசிக்கும் காதல கதை

★ மணிமுடி தரித்த மன்னன் காதலிப்பதுபோல் ஒருபிடிசோற்றுக்கலையும் பிச்சைக்காரனும் காதலிக்கலாம்.

★ காதலுக்குக் கண்ணில்லை. அது ஜாதி, சமூக அந்தஸ்து என்ற எல்லைகளைக் கடந்தது.

★ இதுவரை வெளிவந்த உலக காதல் கதைகளுக்கெல்லாம் தலைமைதாங்கும் மகோன்னதசித்திரம்

★



## பானுமதி, நாகேஸ்வரராவ், கிருஷ்ணமூர்த்தி

★

### பரணி பிக்சரின்

# காதல் (தமிழ்)

கதை:
**பி. பானுமதி,**

டைரக்ஷன்:
**இராமகிருஷ்ணா**

பாட்டுக்கள்
**டி. சந்தனம்**

காமரா:
**கமால்கோஷ்**

சங்கீதம்:
**லேட் சி. ஆர். சுப்பராமன்**



### ரிசர்வ் ஆசனங்கள்

★ முற்கூட்டியேபதிவுசெய்துகொள்வது நலம்.

★ பால்கனி சீட்கள் மாத்திரம்முற்கூட்டியே பதிவுசெய்யலாம். ஆனால் படம் தொடங்குவதற்கு முன்னர் தான் டிக்கட்டுகள் விற்பனைசெய்யப்படும்.

★ கியூ வரிசையில் நின்று வரும் பெண்களுக்கு 2டிக்கட்டுகள்மாத்திரம் கொடுக்கப்படும்.

★ சகல பாஸ்களும், சலுகைகளும் மறுஅறிவித்தல்வரை ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

**போன்: 5033.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நமது விமர்சனம்;

# பானுமதியின் காதல்

## சென்ட்ரலில் திரையிடப்படுகிறது

மோகி. காட்டில் வளர்ந்த கள்ளங் கபடமற்ற வெள்ளை மனம் படைத்த கட்டழகி.

ராஜா. நாகரீகத்தில் திளைத்த நகரத்து வாலிபன். எதிர்பாராத முதற் சந்திப்பிலேயே இருவரும் தங்கள் தங்கள் இதயங்களை பரிமாறிக்கொள்கிறார்கள். அன்பின் ஆரம்பம் அசைக்கமுடியாத காதலாக மாறுகிறது. பரிசுத்தமான இவர்களின் காதலுக்கிடையில், ராஜாவை கணவனுக்கு விட கை விரல்களில் நாள் கணக்கு வைக்கும் லதா மோகியை மனைவியாக்கிவிடும் நோக்கத்துடன் அலைக்கழியும் பரசுராமன் தங்கள் ஆசைக் கனவை நிறைவேற்றிவிட இவர்கள் இருவரும் செய்யும் காரியங்கள் மோகி ராஜா இருவருடைய காதலைச் சிதைத்து சின்னாபின்னமாக்கிவிடுகிறது. கதையின் முடிவு மிகப் பரிதாபகரமானது. ராஜாமீது பரசுராமன் வீசிய கத்தியை மோகி ஏற்றுக் கொண்டு பிணமாகிறாள். லதாவின் எண்ணம் ஈடேறுகிறது. ஆனால் பரசுராமனின் ஆசை?

இதுதான் இப்பொழுது சென்ட்ரல் படமாளிகையில் திரையிடப்படும் காதல் படத்தின் கதை.

தமிழ் நாட்டில் தலை சிறந்த நடிகை பானுமதியினால் எழுதப்பட்ட இக் கதை. அவருடைய சொந்தக் கம்பனியான பரணியில் படமாக்கப்பட்டுள்ளது.

பானுமதியின் கணவரான ராமகிருஷ்ணாவே படத்தை டைரக்ட் செய்திருக்கிறார்.

**நடிப்பு:—**

பொருத்தமானதும் கவர்ச்சிகரமானதுமான உடை அலங்காரத்துடன் தோன்றும் பானுமதி (மோகி) உணர்ச்சி பாவம் நிறைந்த நடிப்பின் மூலம் ரசிகர்கள் மனதில் மிக உயர்ந்த இடத்தை உண்டாக்கிவிடுகிறார். பட்டணத்து அதிசயங்களைத் தெரிந்துகொள்ளுகையில் அவர் முகபாவங்களும், பேச்சுக்களும் அசல் கிராமியப் பெண்ணையே நமக்கு ஞாபகமூட்டுகின்றன. குளோசப்பில் எடுக்க வேண்டிய இக் கட்டத்தில் காமரா மென் கொஞ்சம் கவலையீனமாக இருந்து விட்டார்.

ராஜாவாகத் தோன்றும் நாகேஸ்வரராவ் சொல்லமுடியாத வண்ணம் நடித்திருக்கிறார்.

முட்டாளும் முரடனுமான பரசுராமன் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் முக்காமலா இப் படத்தின் மூலம் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொண்டார். குரூரம் நிறைந்த அவர் பார்வையும் பேச்சுக்களும் அவரை ஒரு கொடியவனாக நம்மையெல்லாம் நினைக்கும்படி காட்டுகிறது.

படத்தின் இதர அம்சங்களில் நல்ல கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. நெஞ்சைக் கவரும் மணி மணியான வசனங்கள் படத்தின் தரத்தை மேலும் மேலும் உயர்த்துகின்றன.

**நம் முடிவு:**

சமூகத்தின் குருட்டுத் தலைமைக்குப் பலியாகும் எண்ணற்ற இளம் உள்ளங்களின் இறுதி முடிவைக் காட்டும் இப் படம் வெறும் பொழுது போக்கு அம்சம் மட்டும் நிரம்பிய தல்ல. சிந்திக்கவும் தூண்டும் கருத்துக்கள் நிரம்பியது. நல்ல கதை நாட்டுக்குத் தேவையான படமென்று சிபார்சு செய்து வைக்கிறோம்.

எஸ். ஆர்.




# சினிமாப் பாட்டுகளின் தடை பற்றி ஜெமினி வாசன் கருத்து

சென்னை—

அகில இந்திய வானொலியில் திரைப்பட இசைத் தட்டுகளை ஒலிபரப்பாமல் தடை செய்துவிடுவதால் இவற்றிற்குப் பொதுமக்களது ஆதரவை குறைத்துவிட முடியாது என்று ஜெமினி ஸ்டூடியோ முதலாளியும் மோஷன் பிக்சர்ஸ் ஸ்டூடியோ அசோசியேஷன் தலைவருமான திரு எஸ் எஸ். வாஸன் இங்கு நடந்த மோஷன் பிக்சர்ஸ் அசோசியேஷன் கூட்டத்தில் கூறினார்.

இந்திய அரசாங்கம் வானொலியினின்றும் திரைப்பட இசைத்தட்டுகள் படிப்படியாக அகற்றப்பட வேண்டுமென்றும், வரும் 6 மாதங்களுக்குள் அவை அறவே ஒழிக்கப்பட வேண்டுமெனவும் கட்டளை இட்டிருப்பதுபற்றி தமது கருத்தை விளக்கிய திரு வாஸன் மேலும் கூறியதாவது:—

"திரைப்படத் தொழில் அதிபர்கள் தமது படங்களின் இசைத்தட்டுகளை வானொலியில் ஒலிபரப்ப வேண்டுமென்று எப்பொழுதும் இந்திய அரசாங்கத்திடம் கெஞ்சியதில்லை. கேவலமான பாட்டுகளாயின் எந்த 'கிராமபோன்' கம்பெனியும் இசைத்தட்டுக்களாக்க முன்வராது. மேலும் ஒவ்வாத பாட்டுகளைத் தணிக்கை செய்து தள்ளிவிட தணிக்கை கழகம் ஒன்று இருக்கின்றது.

**இலங்கை அரசாங்க ரெயில்வே**

**லெவல் கிராஸிங் பழுதுபார்த்தல்**

நாவலப்பிட்டிய ஸ்டேஷனுக்கும் தலவாக்கொல்லை ரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையே, பொது மராமத்து இலாகா மெயின் ரஸ்தாவில் (ரயில்வே மைல் கணக்கில்) 87 மைல், 48 சங்கிலி, 24 லிங்கிலிருக்கும் லெவல் கிராஸிங்குகள் பழுது பார்ப்பதற்காக மேற்கொள்ளும் காலங்களில் வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும்.

3-8-52 ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணியிலிருந்து 4-8-52 திங்கட்கிழமை இரவு 1-00 மணிவரை சம்பூரணமாக மூடப்பட்டிருக்கும்.

4-8-52 திங்கட்கிழமை இரவு 1-00 மணியிலிருந்து காலை 6-00 மணிவரை இடையிடையே மூடப்பட்டிருக்கும்.

இடையிடையே மூடப்பட்டிருக்கும் காலத்தில் வாகனங்கள் லெவல் கிராஸிங்குகளைக் கடந்து செல்ல தவிர்க்கப்படும்.


# முருகன் சென்ட்ரல் மனோகரா

(ஜிந்துப்பிட்டி) (மாத்தளை) (யாழ்ப்பாணம்)

## எங்கும் என் தங்கை என்பதே பேச்சு


ஆரம்பநாள் தொடக்கம் ஆயிரக்கணக் கானோர் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டாள்!

3-வது வெற்றி மாதம்!

சோகத்திற்கோர் எடுத்துக் காட்டு!

பட உலகில் ஓர் புதுமை!

கதை உலகில் ஓர் புரட்சி!




# என் தங்கை

மாதுரிதேவி, ஈ.வி.சரோஜா, எம். ஜி. ராமச்சந்திரன் வி.சுசீலா, நரசிம்மபாரதி.

அழகும் - இனிமையையும் படைத்த கடவுள் கண்ணைப் பறித்துவிட்டார் என்றால் காதல் - சோகம் - கானம் நிறைந்த இப்படம் எப்படியிருக்கும் என்பதை நேரில் கண்டு நிர்ணயம் செய்து தீர்ந்துங்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## முன்னேறுங்கள்

வாழ்வுப் பாதை பட்டு மெத்தையல்ல. கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதை. அதிலே நாம் கவனமாய் நடந்து செல்லவேண்டும். உலகில் பிறந்த எவருமே கஷ்டமின்றி வாழவில்லை, அப்படி வாழவும் முடியாது. எத்தனை துன்பங்கள் நேரினும் நாம் அவைகளைப் பொறுமையுடன் சகிக்க வேண்டும்.

படிப்புமூலம் முன்னேற வேண்டும்; இன்னல்கள் நேரலாம்; ஆனால் நாம் இடறிவிழக்கூடாது. கல்வி என்ற குறிக்கோளை மனதிலே வைத்து அதற்காக வேண்டி அல்லும் பகலும் பாடுபடவேண்டும்.

மாணவர்களே! மனதை மகிழ்ச்சியானதாக வைத்துக் கொள்ளுங்கள்; இன்முகம் காட்டுங்கள்; இன்மொழி பேசுங்கள்; கவலையை விட்டொழியுங்கள்; ஒழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள் உலகத்தோடு ஒத்து வாழுங்கள்.

ஏ. எல். எம் முஹ்தீன்
ஹெட்டிபொத்த

## ஈழவள நாடு

இந்து மகா சமுத்திரத்தில் திலகம் போலவும் கார் மேகத்தின் இடையே திலங்கும் கதிரொளி போலவும் ஒளிப்பது இலங்கா நாடு. நம் நாடு மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்த நாடு. நீர்வளமும், நிலவளமும் நீங்காது நிழல் விரித்த நெடிய மரங்கள் செறிந்த நாடு மந்திகளுமறியாத டசுங்தேன் சுளிக்கும் பருவச்சோலைகளும், கற்பகக்காவுகளும் உடைய நாடு. இந்திரலோகம்போன்ற அளவிறந்த வளங்களாலும், எண்ணுதற்கியலாத பொழில்களும், கண்ணுக்கமையாத இயற்கை காட்சிகளும், நதி குளம் போன்றவைகளும் நிறைந்த நாடு.

கரையெங்கும் பாசிபடர்ந்த சுனைகளை திரையெங்கும் வீசிவரும் மகாவலிகங்கை, களனி, கருவியாறு முதலிய நதிகளும், பச்சிலை, மூங்கில், பனை முதலிய மரங்களும், கப்பலமா, கவரிமா முதலிய மிருகங்களும், சாதகம், பயில், சாரசம் முதலிய பறவைகளும், போதுகள் விரிந்து நிறைந்த தாமரைப் பொய்கைகளும், அழகிய காடுகளும், மேடுகளும், மலைகளும், பள்ளங்களும், பச்சைபசேலென காட்சியளிக்கும் வயல்களும் நிறைந்த நாடு.

மக்கள் வயிறார உணவருந்தி, கவலையும், பசியும், பிணியுமின்றி பண்புற வாழ்ந்த நாடு. அரும்பும், மலரும், காயும், கனியும் உதிர்ந்து விழும் நாடு. அறம், பொருள், இன்பம், மூன்றையும் ஆன்றோர் சிறப்பாக நடாத்திய நாடு. பலவகைச் செல்வமும் பல் இயல்பாகிய நாடு.

கலைமகளும், திருமகளும் களித்து நடனம் புரிந்த நாடு. சீரும், சிறப்பும், வீரமும், வளமும் நிறைந்த நாடு. கடல் கடந்து வாணிபம் செய்து கலம் நிறைய பொருள் புகுந்த பொன்னாடு. தென்றலும் வாடையும் வீசும் நாடு. முத்து, பவளம், கோமேதகம், வைடூரியம் நிறைந்த நாடு. கதிர்காமம், சிவனொளிபாதமலை, மடுபோன்ற திருஸ்தலங்களையுடைய நாடு. இராவணன் இருந்து ஆண்ட நாடு, நம் தாய் நாடாகிய இலங்கா நாடு.

பெ. அ. வைத்திலிங்கம்
சென்ற் அன்றூஸ் கல்லூரி
நாவலப்பிட்டிய.

## அறியத்தக்கன

1 இன்று உலகிலுள்ள மூன்று வல்லரசுகளெவை?

2 உலகில் அதிக பஞ்சு விளையும் நாடு எது?

3 உடம்பின் சாதாரண வெப்ப நிலை எவ்வளவு?

4 உலகிலுள்ள ஆறு பெரிய பட்டினங்களெவை?

5 இந்தியாவில் முதல் முஸ்லிம் படையெடுப்பு எப்போ நிகழ்ந்தது?

6 பிலிப்பைன் தீவுக்கூட்டத்தில ஏறக்குறைய எத்தனை தீவுகள் உண்டு?

7 சர்வாதிகார ஆட்சி என்றால் என்ன?

8 ஜனநாயக ஆட்சி என்றால் என்ன?

### விடைகள்

1 பிரித்தானியா, அமெரிக்கா, ரஷ்யா

2 அமெரிக்கா

3 98-4-F

4 லண்டன், மாஸ்கோ, நியுயோர்க, டோக்கியோ, பெர்லின், கல்கத்தா.

5 கி. பி. 712

6 7070

7 ஒருவனின் அதிகாரத்துக்குட்பட்ட ஆட்சி.

8 மக்களால் நடாத்தப்படும ஆட்சி.

யூ. எல். தாவூது
ஜூனியர் பாடசாலை
எருவூர்.

## கவிஞர் திலகம் கம்பர்

செந்தமிழ் நாடாகிய சோழநாட்டிலே திருவழுந்தூர் என்னும் கிராமத்திலே ஆதித்தர் என்பவருக்கு மகவாய் கி. பி. 1132-ம் ஆண்டு கம்பர் உதித்தார். இவர் இளம் பிராயத்திலேயே பெற்றோரைப் பிரிந்து வருந்தினார் கூறிய மதியுடைக் கம்பரை திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் ஆதரித்து அறிவு பெறச் சீரிய ஆசிரியரிடத்துப் படிப்பித்தார்.

வால்மீகி இராமாயணத்தை வடமொழியிற் கண்ட கம்பர் அக் காவியத்தைத் தேனினுமினிய செந்தமிழில் ஆக்கக் கருதி ஊக்கத்துடன் உழைத்தார். அவர் உழைப்பு வீண்போகவில்லை. புரவலர்கள் பொன்னும் பொருளும் அளித்து வரவேற்றனர். ஓங்கியது கம்பன் புகழ்!

கம்பர் சடையப்ப முதலியாரும் பிற பெரியோர்களும் வேண்டிக் கொண்டதற்கிணங்கித் தாம் பாடி முடித்த இராமாயணத்தை சோழ மன்னன் மன்றத்தில் அரங்கேற்றினார். வேளாளர் பெருமையை வெளிக்காட்ட விரும்பிய கம்பன் "ஏர் எழுபது" என்னும் நூலை எழுதினார். மற்றும் 'சடகோப அந்தாதி' "திருக்கை வழக்கம்" என்னும் நூல்களையும் பாடினார் கம்பர் இயற்றிய நூல்களில் இராமாயணம் தலைசிறந்தது.

கவிஞர் தலைப்-புலவருட் புலவராய் விளங்கி கி. பி. 1162-ம் ஆண்டு மண்ணுலகு நீத்துப் பொன்னுலகெய்தினார். அவர் இறந்து விட்டார். ஆனால் அவர் இயற்றிய இராமாயணம் இன்னும் இறக்கவில்லை. இவர் பெயரை இலங்க வைத்துக்கொண்டு துலங்குகின்றது இராமாயணம்.

ஓங்குக கம்பன் புகழ்!

இப்படிக்கு
க. பொன்னம்பலம்
ஆயப்பதி.

## ரூஸ்ஸோ

ரூஸ்ஸோ 1712ம் ஆண்டு ஜினிவா என்னும் நகரில் பிறந்தார். சிறுவயதிலேயே எதையும் ஆராய்ந்தறியும் தன்மையுடையவனாக விளங்கினார் இவர் ஒரு பாடசாலையிலும் ஒழுங்காகப் படித்தது கிடையாது. சிறு வயதிலேயே உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி வறுமைப் பிணியால் வாடிய இவர் 1728ல் அவரது தாயகமான ஜினிவாவைவிட்டு வெளியேறினார். அப்போது இவருக்கு வாரென்ஸ் என்னும் சீமாட்டியின் உதவிகிடைத்தது. அந்த அம்மையாரின் உதவியின் கீழிருக்கும் போதுதான் அரசியல் நூற்களை ஆராய்ந்தார். பின்னர் பாரிஸ் சென்றார். அப்போதுதான் மக்களை மாக்களாக மதித்த அரசாங்கத்தின் கொடுமைகளைக் கண்டார் தொழிலாளர்களுக்குப் பிரபுக்கள் இழைக்கும் அநீதிகளைக் கண்டார். நெஞ்சங் குமுறினார். சர்வாதிகாரத்தைத் தகர்த்தெறியத் திட்டந் தீட்டத் தொடங்கினார்.

ரூஸோ பல நூற்கள் எழுதியிருக்கிறார் அவைகளில் "சமுதாய ஒப்பந்தம்" "எமிலி" அல்லது 'கல்வி' எனுமிவ்விரு நூற்களுஞ் சிறந்தவை

ரூஸோ தனிமையை விரும்பி "எர்மென்வில்லே" எனும் இயற்கை அழகு மிக்க இடத்தில் குடியேறினார் அங்குதான் 1788ம் ஆண்டு இயற்கையெய்தினார் அப்பொழுது இவருக்கு வயது 66.

கபூர்
காத்தான்குடி

## மாணவர் கடமை

உலகத்து உயிர்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே பற்பல கடமைகள் இருப்பதுபோல் மாணவர்களுக்கும் இருக்கின்றன.

மாணவர்கள் தினந்தோறும் ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று வரவேண்டும். வகுப்பறைகளையும், பாடசாலையையும் துப்பரவாக்க வேண்டும். இவ்வேலையை மற்றவர்கள் செய்யட்டும் என்று பின் நிற்கக்கூடாது.

ஆசிரியர்கள் பாடசாலைக்கு வரத் தாமதமானால் சப்தம் போடாமல் ஒழுங்காய் இருக்கவேண்டும்.

படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் பெரிதும் கடமைப்பட்டு இருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு கொடுக்கவேண்டியது காசு, பணமல்ல அன்பும், கீழ்ப்படிதலுமேயாகும் அப்பொழுதுதான் ஆசிரியர்கள் மனம் கனிந்து ஊக்கமாகப் படிப்பிப்பார்கள்.

பாடசாலைப் பாடங்களை மட்டும் படிப்பதோடு பிள்ளைகளின் கடமைகள் நின்றுவிடவில்லை, புதினப் பத்திரிகைகளையும், மற்றும் புத்தகங்களையும்ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாகுதல் வாசித்துவர வேண்டும் இது வளர்ந்துவரும் மாணவரின் சிறந்த அடையாளமாகும்.

ஜே எம். சாதிக்கீன்
வெள்ளைமணல்
சினன்வாடி


## எங்கள் கிராமம்

எங்கள் கிராமத்தின் பெயர் மருதமுனை. இது மட்டக்களப்பிலிருந்து கல்முனைக்குப்போகும் பாதையில் 22-ம் மைலுக்கும் 23-ம் மைலுக்கும் மத்தியில் இருக்கிறது. இக் கிராமத்தில சுமார் ஆயிரத்துக்குமேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள் இவர்கள் முஸ்லிம மக்களே. இவர்களில் சிலர் கமம் செய்கிறார்கள் இன்னும் சிலர் வியாபாரம் செய்கிறார்கள். சிலர் நெசவுத் தொழிலும் மீன்பிடித் தொழிலும் செய்கிறார்கள். பெண்கள் பாய் இழைக்கிறார்கள் இக் கிராமத்தை இரண்டு குறிச்சிகளாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த குறிச்சி இரண்டுக்கும் இரண்டு கிராமத் தலைவர்கள் உளர்.

இக்கிராமத்தில் இரண்டு பள்ளிவாசல்களும, ஒரு அரசினர் முஸ்லிம பாடசாலை ஆண்களுக்கும், ஒரு அரசினர் முஸ்லிம பாடசாலையும், பெண்களுக்கும் ஒரு ஜனசமூக நிலைய வாசிகசாலையும், ஒரு உப-தபாற்கந்தோரும், கிராம முன்னேற்றச சங்க காரியாலயமும் இருக்கின்றன.

இக் கிராமம் பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்ததாகும். எங்கள் கிராமத்தில ஒருசந்தையும் உண்டு. இக்கிராமத்திற்கும் ஏனைய கிராமங்கட்கும கல்முனை ஒரு தலைபட்டணமாக விளங்குகிறது.

ஆ. மு. மு முகைடீன்
வெஸ்லி உயர்தர பாடசாலை
கல்முனை.



பாகிஸ்தான் கப்பற்படைக்காக அலுமினியத்தால் செய்யப்பட்ட வதலைத (படகு) ஒன்று [illegible] வெள்ளோட்டம் விடப்பட்டு பன்முறை பரிசோதனை செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுக்கடைகளிலும், விலைமாதர் விடுதிகளிலும் மக்கள் பிரதிநிதிகள்

தென் கொரியாவின் புகழ் உச்ச நிலை அடைந்து வருகிறது அந்நாட்டுசர்வாதிகாரிசிங்மன்ரீ முடிவு காணுத ஒரு யுத்தத்தைமட்டும ஆரம்பித்து வைக்கவில்லை. விசித்திரமான ஒரு பாராளுமன்ற சம்பிரதாயத்தையும் ஸ்தாபித்திருக்கிருர். சிங்மன்ரீ சர்வாதிகாரி என்றலும் ஒரு பாராளுமன்றமும் அங்கு இருக்கத்தான் செய்கிறது.

“ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை சபைக்கு இருக்கக் கூடாது” என்ற தீர்மானத்தை சமீபத்தில் சிங்மன்ரீ பாராளுமன்றத்தில் பிரரேபித்தார். ஆனுல் எதிர்க் கட்சியினர் இத்தீர்மானத்தை எதிர்த்துத் தாக்கி, அதை அக்கு வேறு, ஆணிவேருகப் பிளந்து தள்ளவுமில்லை. சண்டப்பிரசண்டமாக மயிர் பிளந்து வாதிக்கவுமில்லை. அதெல்லாம் நம் நாட்டு எதிர்க் கட்சியினரின் வேலையல்லவா?

கொரிய எதிர்க் கட்சியினர் ஒரு நவீன முறையைக் கையாண்டார்கள். அவர்கள் சபைக்கே வராமல் தலைமறைவாகப் போய் விட்டார்கள். தங்கள் பிரதிநிதிகள் ஒரு தனிப் பாராளுமன்றத்தை நிறுவிக்கொண்டார்களோ என்ற சந்தேகம் அப்பாவி வாக்காளர்களுக்கு ஏற்பட்டுவிட்டது

சபையில் போதிய பெரும்பான்மையினர் ஆஜராக இல்லாததால் சிங்மன்ரீக்கு தனது தீர்மானத்தை நிறைவேற்ற முடியவில்லை உலக யுத்தத்திற்கே வித்திட்ட அந்த மகானுபாவரா விடுவார் சபை பன்முறை கூடியது எதிர்க் கட்சியினர் வரவில்லை. ஆகவே சபையில் கோரமில்லை. இதைச் சமாளிக்க சபாநாயகருக்கு ஒரு விந்தையான யுக்தி தோன்றியது. அவர் கோரமில்லையென்று சபையை ஒத்திவைக்கவில்லை. “பாராளுமன்றப் பிரதிநிதிகள் எங்கிருந்தாலும், அவர்களைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்” என்று அவர் போலீஸாருக்கு உத்தரவிட்டார் 2000 போலீஸார் பிரதிநிதிகளைப் பிடிக்கும் வேலையில் ஈடுபட்டனர் ஹோட்டல்கள், மதுபானக் கடைகள், சூது, களியாட்டங்கள் நடக்குமிடங்கள், விபசார விடுதிகள், சினிமா கொட்டகைகள் முதலியவற்றிலெல்லாம் நுழைந்து வலை வீசினார்கள் இவ்வாறு பிரதிநிதிகளை வேட்டையாட இரு தினங்களாகி விட்டன

இதற்கிடையே, சபைக்கு வந்திருப்பார்கள். மதுபானக் கடைகளிலிருந்தும் விபசார விடுதிகளிலிருந்தும் பிரதிநிதிகளைப் பிடித்து வரும்வரை இரு தினங்களாக காத்திருப்பார்களா என்ன? அவர்கள் ஒவ்வொருவராக சபா நாயகருக்கு “டிமிக்கி” கொடுத்துவிட்டு, பூனைபோல கம்பி நீட்ட ஆரம்பித்தார்கள். உடனே சபா நாயகர் போலீஸ் ஜவான்களை சபையின் வாயில்களில் கொண்டு வந்து நிறுத்தி, பிரதிநிதிகள் யாரேனும் வெளியேற முயற்சி செய்தால், அவர்களைப் பிடித்து உள்ளே தள்ளும்படி உத்தரவிட்டார், பிரதிநிதிகளின் விழி பிதுங்கியது. அவர்களும் புதிய பாராளுமன்ற சம்பிரதாயங்களை ஸ்தாபித்தார்கள். சபையில் கோரம் சேரும்வரை அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியாதல்லவா?

ஆகவே சபையிலேயே சூதாட ஆரம்பித்தார்கள். நன்குபோதையேறும்வரை குடித்தார்கள். குதித்தார்கள், பாடினார்கள், சினிமா படங்களை சபையில் ஓட்டி கண்டுகளித்தார்கள் பாராளுமன்றம் ஒரே அமர்க்களமாகிவிட்டது “எதை வேண்டுமானாலும் செய்யுங்கள் ஆனால் வெளியே மட்டும் நழுவி விடாதீர்கள்” என்பது சபா நாயகர் உத்தரவு. போலீஸார் பிரதிநிதிகளைப் பிடித்துவந்து சபைக்குள் தள்ளிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு இரண்டாவது நாள் இரவு சபையில் கோரம் சேர்ந்து விட்டது

தீர்மானத்தின்மீது வாக்கெடுக்கப்பட்டது. தீர்மானத்திற்கு சாதகமாக வாக்களிக்காவிட்டால், பிரதிநிதிகள் சபையிலிருந்து வெளியேற கடைசிவரை அனுமதிக்கப் போவதில்லை என்று சிங்மன்ரீ திட்டவட்டமாகக் கூறிவிட்டார். தீர்மானம் நிறைவேறினாலும் பரவாயில்லை, சனியன் விட்டால் போதுமென்றாகி விட்டது பிரதிநிதிகளுக்கு. ஆகவே அவர்கள் மூச்சுப் பேச்சின்றி தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார்கள்.

எப்படி பாராளுமன்ற ஜனநாயகம்? பாராளுமன்றமென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்? இந்தக் “கோரம்” சேர்க்கும் பாராளுமன்ற முறையை பிற நாடுகள் ‘காப்பி’ அடித்து விடக் கூடாதே என்று கவலைப்படுகிறோம் இதில் மற்றுமொரு வேடிக்கை என்னவெனில் தென் கொரியப் பிரதிநிதிகள் “புதுமசத்துகளாக” இருப்பது தான் அவர்களை வாக்காளர்கள் பேட்டிகாண வேண்டுமென்றால், மதுக் கடைகளையும், சூதாடுமிடங்களையும், விபசார விடுதிகளையும் தேடிப்போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதைக்கண்டு உண்மையில் அவர்கள்மீது அனுதாபப் படுகிறோம்.

# அஜ்-பகிஸ்தான்

## தொழிற்சாலை அபிவிர்த்தி

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சாலை இரும்பு சப்ளை செய்துகொண்டிருக்கிறது.

ஒவ்வொரு கட்டடத்திலும் தொழிலாளிகள் நன்கு கவனிக்கப்படுகின்றனர். அதிக உஸ்ணமும், வெயிலும் காணப்படுமிடங்களில் தொழிலாளிகள் சுகமாய் நின்று தங்கள் வேலைகளைச் செய்யும் வகையில் சௌகர்யம் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றனர். இரும்பு உருக்கும் இடங்களிலும் வெளியிலிருந்து குளிர்ச்சியான காற்று வீசும் வகையில் பல நவீன முறை அமைக்கப்பட்டிருக்கின்றன. இடசுத்தமும் தொழிற்சாலை சுத்தமும் தொழிலாளிகள் சுகமும் அடிக்கடி கவனிக்கப்படுகின்றன.

இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டபின் அஜ்பக் பகுதியை சார்ந்த மக்கள் ரஷயப் பொதுமக்களின் உதவிகொண்டு அருமையான சாமர்த்தியமிக்க தொழிலாளிகள் பலரை உண்டுபண்ணிவிட்டனர். இவர்களுள் ஒவ்வொருவரும் இரும்பு தொழிற்சாலை நிபுணர்களாகவே காட்சியளிக்கின்றனர் அஜ்பக என்னுமிடத்தில தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டபோது எண்ணூறு வாலிபர்கள் தான் இரும்புதொழிற்சாலையில் வேலை செய்ய வேண்டுகோள் விடுத்திருந்தனர் இவர்களையெல்லாம் சோவியத் அரசாங்கம் தன் சொந்த செலவில் இத்தொழிலைக் கற்றுக் கொள்ள பெரிய தொழிற்சாலைக்கு அனுப்பி வைத்தது.

அஜபக் இரும்புத் தொழிற்சாலை ஒரு சிறிய கிராமத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. இந்த கிராமம் மாபெரும் நகரமாய் இப்பொழுது காட்சியளிக்கின்றது.

அஜ்பக் நகரம் பீகோவாத் என்னும் ஒரு பெரிய நகரை தனக்கருகே உண்டு பண்ணிவிட்டது. பெரும்பாலும் இதில் தொழிற்சாலை தொழிலாளிகளே குடியிருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் சொந்தமாக தனித்தனியே வீடு உண்டு. இதைக் கட்டிக் கொள்ள சோவியத அரசாங்கம் இலகுவான திட்டங்களின்படியே கடன் நிதி உதவி அளித்திருக்கிறது. போகாவாத் என்னும் புதிய நகரில் பல கலாசாலைகள் உண்டு. அன்றியும் பிள்ளைகள் தேக பயிற்சிசாலைகள் பலவும் இங்குண்டு. பெரிய வைத்தியசாலையுமுண்டு. இதற்கெல்லாம் கட்டணமேதுமில்லை. இலவசமாகவே வைத்தியம், கல்வி, விளையாட்டு தேக பயிற்சி ஆகியவற்றைப் பெறலாம போகாவாத் நகரில் பல உல்லாசத் தோட்டங்களும் பசுமையான சாலைகளும் விளையாட்டு மைதானங்களும் அமைக்கப்பட்டிருப்பது அதிசயிக்கத்தக்கதாயிருக்கின்றன.

THE BOOK OF THE MOMENT

THE TAMILIANS IN CEYLON
AND
A FEDERAL CONSTITUTION
BY
GEORGE LIVINGSTONE.
Price Re. 1/-

Copies available at the Sutantiran Office, 194A, Silversmith Street, Colombo-12.

முள்ளுக்கம்பி
விற்பனவுக்குஇருக்கின்றது.
450 யார் 12½ கேச் அந்தர் ரூபா 54-00
உங்கள் தேவைகட்கு எங்களிடம்
வாருங்கள்.
சாமுவேல் சன்ஸ் அன் கம்பெனி
லிமிட்டெட்.
371 ,பழைய சோனகத் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 2341. தபால்பெட்டி; நிர். 46.

மாதவிடாய் நின்றுபோனதா?
நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688
எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)
கர்ப்பத்தடை
நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)
சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11
M/grs SEENU & CO.. POST BOX. 1638. MADRAS-1
பிராஞ்ச் 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிங்ஸ்லி வெம்பிளி வெலிங்டன்

நெஞ்சைவிட்டகலாத நிகழ்ச்சிகளின் கோவைதான்

## 5-வது வெற்றி வாரம்


# வேலைக்காரன்

- வாடா மலராக இருந்த வடிவழகி மல்லிகாவின் கற்பைக் கெடுக்கிறான் குமார்
- மல்லிகா தந்திரத்தால் அவனது உயிருக்கு உலைவைக்கிறாள்.
- மைந்தன்மீது தந்தை கொலைக் குற்றம் சாட்டுகிறார்.
- குமாருக்கு விஷமளித்தது யார்?
- கொலைக் குற்றம் சாட்டப்பட்ட மோகன் கதி என்ன?

ஆயிரக்கணக்கான சினிமா ரசிகர்களின் ஏகோபித்த மதிப்புடன் ஓடுகிறான்

# "வேலைக்காரன்"

உங்கள் அபிமான நடிகர்கள் நடித்தது.



நடிகர்கள்:
டி. ஆர். மகாலிங்கம்
டி. எஸ். பாலையா,
எஸ். வி. சுப்பையா
வி. கே. ராமசாமி,
வி. எம். ஏழுமலை

நடிகைகள்:
மாதுரி தேவி,
எஸ். வரலட்சுமி
கே. ஆர். செல்லம்
டி. வி. குமுதினி
எம். எஸ். த்ரௌபதி



## காமினியில்

பார்க்கப்பார்க்க குதூகலத்தை உண்டாக்கும் பலே! ஆங்கிலச் சித்திரம்

### ஒரு மார்க்கப் பாதை

நடிகர்கள்: ஜேம்ஸ்மேசன், மார்ட்டாடோரன் டான்டர்யீ

## மைலனில்

கண் கவரும் நடனங்களைக் கொண்ட சிறந்த தமிழ்ப்படக் காட்சி.

### வேதாள உலகம்

நடிகர்கள்: டி. ஆர். மகாலிங்கம், லலிதா-பத்மினி, மீ. சாரங்கபாணி


இப்பத்திரிகை கொழும்பு, தட்டாதெரு, 196ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் [ சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பில் 194ஏ, தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1952 ஜூலை 27ந் தேதி பிரசுரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org